# கிராந்தக்கு

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்



நன்கொடை...
ரூ. 4/-

செப். 2001

# TATTI COMPUTERS

Software Development Division

Govt of TamilNadu,
Bound to Govt of India

"Delay is the enemy of efficiency"

*Keep in touch,*

13-D, IInd Floor, Cutchery Road,
Mayiladuthurai. ☎ : (04364) 26461



தமிழர்கள் ஜப்பானியர்போலவே... ...7





நம் கல்லூரியில் மருத்துவப்படிப்பு... -13

மயிலாடுதுறையில் 42 கோடியில்
பாதாளசாக்கடை... -71

புதுவை(மை) பயணம்... -35


***இவற்றுடன்***
***கட்டுரை, கதைகள், கவிதைகள்***
***மற்றும் பயனுள்ள தகவல்கள்...***

... நடைபோடுங்கள் உள்ளே...

# இளந்தூது

| தூது : 13 | அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம் | செய்தி : 1 |
|---|---|---|

## விழித்தெழ மனமில்லாத வரை ...

"ஏர்வாடி"! எந்தக் கல்நெஞ்சையும் சற்று அதிரத்தான் வைத்திருக்கும். கருகிய மரக்கட்டைகளுக்கும், மனித உடலுக்கும் வித்தியாசம் தெரியாத அந்த கொடூரக் காட்சி, இன்னும் நம் கண்களை விட்டு அகலவில்லை. இருபத்தி சொச்சம் உயிர்கள், அவர்களின் ஒவ்வொரு செல்லும் அக்கினிக்கிரையாய். மனநோயாளிகளுக்கு அக்கினி சிகிச்சை ..., இதென்ன விபரீதம். நம்மால் இந்தப் பழியைக் காலத்தின் பேரில் போட இயலவில்லை. இவர்களுக்குத் தனிகொட்டகையும், இரும்புச் சங்கிலிக் கட்டும் பரிசளித்தது யார்? குழந்தை மனம் கொண்ட இவர்களைக் குணப்படுத்த முடியாத மனநோயாளிகள் என்று முத்திரை இட்டு ஒதுக்கிவைத்தது யார்?

பெற்றவளையும் ,தொல்லை விட்டது என்று காப்பகத்தில் தள்ளிவிட்டுத், தள்ளி நின்று வேடிக்கை பார்க்கும் கூட்டம் இன்னமும் குறையாத போது, அவர்கள் விழித்தெழ மனம் இல்லாமல் இருக்கும் வரை இன்னும் எத்தனை, எத்தனை ஏர்வாடிகளோ ....







## அன்பார்ந்த வாசகர்களுக்கு . . . வணங்குகிறோம்.

பதிமூன்றாமாண்டின் முதல் இதழினை இப்புதிய ஆசிரியர் குழு வெளியிடுகிறது. மார்ச் 2001 இதழுக்குப்பின் இந்தச் செப்டம்பர் இதழினில் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். கல்லூரித் தோட்டத்தில் புதுமலராய்ப் பூத்திருக்கும் முதலாமாண்டு மாணவர்களுக்கு எங்களது சிறப்பு வணக்கங்கள். பன்னிரண்டு ஆண்டுகள் வெற்றி நடை போட்ட இளந்தூது இன்று பருவ வயதினுள் **(Teen age)** நுழைந்துள்ள மகிழ்ச்சியினை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். இவ்வினிய தருணத்தில் நமக்குத் தொடர்ந்து தம் ஒத்துழைப்பை நல்கிவரும் நம் கல்லூரி முதல்வர் முனைவர்.வி.இராதாகிருஷ்ணன் அவர்களையும் இளந்தூதுவின் முதல் ஆசிரியரான திரு.ஏஇசட்.இராதாகிருஷ்ணன் அவர்களையும் வணங்குகிறோம். மேலும் நமக்கு ஒரு சிறந்த ஒருங்கிணைப்பாளராகவும், நல்ல வழிகாட்டியாகவும் இருந்து நம்மைப் பன்னிரண்டு ஆண்டுகள் வரை கைபிடித்து அழைத்து வந்த பேராசிரியர் திரு.ஞா.வாசுதேவன் அவர்களுக்கும் எங்களின் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் எங்களின் புதிய ஒருங்கிணைப்பாளர் முனைவர் துரை.குணசேகரன் அவர்களை வணங்கியும் வரவேற்கிறோம்.

## பருவ வயதினுள் (Teenage) இளந்தூது

எங்களுக்குச் சிறகுகளைச் செதுக்கித் தந்த எங்களின் ஆசிரியர் (12-ஆம் ஆண்டு) திரு.சு.விஜய் மற்றும் மற்றைய ஆசிரியர் குழுவினரையும் இத்தருணத்தில் வணங்கி அவர்களின் வாழ்த்துக்களோடு எங்கள் பணியைத் தொடங்குகிறோம். மேலும் புத்தகம் பிரித்து வாசம் நுகரும் நெஞ்சங்கள் இருக்கும் வரையில் இளந்தூதுவிற்கு எப்பாதையும் வெற்றிப் பாதையே என்ற நம்பிக்கையோடு இளந்தூதுவினை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். உங்களின் திறனாய்வுப் பார்வையால் எங்களை உயர்த்துங்கள்.

-ஆசிரியர் குழு

"தங்க நட்சத்திர விருது" பெற்ற ஏ.வி.சி. ஆட்சிமன்றக்குழுத் தலைவர் திரு. பி.என்.இரத்தினக்குமார் அவர்களுக்கு எங்களது வாழ்த்துக்கள்

நவீன ரெடிமேட் ஆடைகளின் உலகம்

எஸ்கொயர்

122-A, பட்டமங்கலத்தெரு, மயிலாடுதுறை, (மணிக்கூண்டு அருகில்)

☎ 23243



ESQUIRE

The entire world for modern Readymade dresses

எண்ணங்களை வண்ணமயமாக்க!

எஸ்கொயர் வீடியோஸ்

பாத்திமா கனி லாட்ஜ், முதல் மாடி, மயிலாடுதுறை. ☎ 22944





# எமனுக்குப் புத்தியில்லை

எமனுக்குப்
புத்தியில்லை
இருந்திருந்தால்
இதுபோல் செய்திருக்க மாட்டான்!

விருதுகளால்
அலங்கரிக்கப்பட்டவனை
இன்று,
விறகுகளால்
அலங்கரிக்கவிட்டிருப்பானா?

ஆம்!
எமனுக்குப் புத்தியில்லை
இருந்திருந்தால்
இதுபோல்செய்திருக்க மாட்டான்

விதவையர் சங்கத்தையும்
நடிகர்கள் சங்கத்தையும்
ஒன்றாக்கி விட்டானே!
ஆம்!
இரண்டுபேருமே திலகம் இழந்தவர்கள் தான்!

விதவையர் சங்கத்திற்க்கும்
நடிகர் சங்கத்திற்க்கும்
ஒரே பெயர்தான் இனி ...
"திலகமிழந்தோர் சங்கம்"

து.செல்வமுத்துக்குமார்
இளம் விலங்கியல் (நிறை)

☎ 27007

அதிநவீன தொழில்

நுட்பத்தில் ...

*Digital*

**லியோ**

**ஸ்டுடியோ — வீடியோ — லேமினேஷன்**

**28/5, No. 1, A.R. நஜீம் காம்ப்ளக்ஸ்,**
**டவுன் எக்ஸ்டன்ஷன்,**
**பேருந்துநிலையம் பின்புறம்,**
**மயிலாடுதுறை.**
**Pin : 609 001.**





# தமிழர்கள் ஜப்பானியர்கள் போலவே இருக்கிறார்கள்

நம் தமிழை, நம் தமிழர் மறப்பினும் நம் தமிழ் நாநிலம் சொல்ல வாழ்வதை மறப்பதற்கில்லை. ஆம், ஜப்பானில் பிறந்து ஜப்பானியராய் வளர்ந்து இன்றோர் தமிழ்தாசனாய் வாழும் இவர் திரு.ஹு"க்காவோ ஜு"ன்யிட்சி. இவரை நம் இளந்தாது ஆசிரியர் குழு சந்தித்த, பரிமாறிக் கொண்ட சிந்தனைச் சிதறல்கள் இதோ ...

**தங்களின் தமிழார்வம் பற்றி?**

நான் படித்துக் கொண்டிருந்த காலங்களில் இந்தியா பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். பின் ஆர்வம் காரணமாக என் படிப்பு முடிந்ததும் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டேன். அதன் விளைவாய் இந்தியாவில் நான் பத்து மாதங்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். இதில் இரண்டு மாதங்கள் இராமேஸ்வரத்தில் இருந்தபோது தமிழையும், தமிழர்களையும் பற்றி எனக்கு அறிமுகம் கிடைத்தது. பின் அதுவே பெரும் ஆர்வமாய் மாறி என்னைத் தமிழாராய்ச்சியில் ஈடுபடுத்தியது.

**தமிழில் எத்துறையில் தங்களின் ஆராய்ச்சி?**

எனது கவனம் தமிழ் தொல்பொருள் ஆராய்ச்சியில் மிகுந்ததால் அதனைத் தேர்ந்தெடுத்து அதில் பி.ஏ., மற்றும் எம்.ஏ., பட்டம் பெற்று எனது ஆராய்ச்சியைத் தொடங்கினேன்.

**தாங்கள் தமிழ் கற்றுக்கொள்ள ஆரம்பித்தது .**

1992 முதல் தமிழைப் படிக்க ஆரம்பித்தேன்.

**தங்களுக்குத் தெரிந்த மொழிகள் ...**

ஜப்பனீஸ், ஆங்கிலம், ஹிந்தி, தமிழ்

*8.11.2000* முதல் மயிலாடுதுறையில் ☎ : 22382

ஒரு புதிய அறிமுகம்!

**கம்ப்யூட்டர்**

**டெக்னாலஜியுடன் கூடிய**



# குரு டிஜிட்டல் போட்டோ ஸ்டுடியோ

- கருப்பு வெள்ளைப் படங்கள் அவற்றின் நெகட்டிவ் இல்லாமல் வண்ணப்படங்களாக்க
- குரூப் போட்டோவில் உள்ள உருவங்களில் தலைப்பகுதி மட்டும் பிரித்து முழு உருவப்படமாக்க
- பூச்சி அரித்து சிதைந்து போன போட்டோக்களை முழுமையாக்க
- மேற்படிப்பு, வேலைவாய்ப்பு மற்ற தேவைகளுக்கும் விண்ணப்பிப்பதற்கு போட்டோக்களிலேயே பெயர், பிறந்த தேதி, முகவரி முதலியவற்றைப் பிரிண்ட் செ
- உங்கள் விருப்பத்திற்கேற்ப இயற்கைக் காட்சிகள் மற்றும் வெளிநாட்டு சீனரிகளின் பின்னணியுடன் கண்கவர் வண்ணத்தில் புகைப்படம் எடுக்க
- அவசரத் தேவைக்குப் பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்கள் டிஜிட்டல் கேமரா மூலம் பத்து நிமிடத்தில்.
- பழைய ஐடென்டி கார்டு மற்றும் லைசன்ஸ்கள், அவற்றின் டூப்ளிகேட்டுகளைத் தெளிவாக எடுத்து லேமினேட் செய்ய
- மேலும் பலவித நுட்பங்களில் புகைப்படங்களைக் கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்துடன் எடுத்துத் தருகிறோம்.



**எஸ். குருமூர்த்தி**
**குரு டிஜிட்டல்**
**போட்டோ ஸ்டுடியோ**
**ராஜ் பில்டிங், மயிலாடுதுறை.**



- *தங்கள் பார்வையில் எம்மொழி சிறந்தது என நினைக்கிறீர்கள்?*

மொழியில் என்றுமே உயர்வு தாழ்வு கிடையாது. ஆனால் அடிப்படை அவசியம் தாய்மொழியே. ஏனெனில் ஒரு நாட்டின் உயர்வுக்கு மொழி பெரும் பங்களிக்கிறது.

- *தமிழர்களிடம் உங்களுக்குப் பிடித்தது?*

தமிழர்கள் ஜப்பானியர்கள் போலவே இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் எல்லோரிடத்திலும் அன்பாய், பரிவாய்ப் பழகுகிறார்கள்.அதனால்தான் எனக்குத் தமிழர்களைப் பிடித்துவிட்டது.

- *தமிழரின் பண்பாடு, கலாச்சாரம் பற்றி?*

எல்லாமே ஓரளவு ஜப்பானியர்கள் பின்பற்றுவது போலவே உள்ளது. (இங்கும் அங்கும் மேற்கத்திய கலாச்சாரமோகம் இருப்பதாய்க் கவலை கொள்கிறார்.)

- வட இந்தியா, தமிழ்நாடு ஒப்பிடுங்களேன் ...

வடநாட்டில் மக்கள் பழகும்விதம் சுவரில் அடித்த பந்து போன்றது. ஆனால் இங்கு மக்கள் அவர்களுக்குள் ஒருவராய் நினைத்தே பழகுகிறார்கள்.

- ஜப்பானில் வேற்றுமொழித் திரைப்படங்கள் பற்றி ...

தமிழில், "முத்து" படம் ஜப்பானில் நல்ல வரவேற்பைப் பெற்றது. சில ஆங்கிலப் படங்களுக்கும் ஓரளவு வரவேற்பு இருக்கிறது.

- தங்கள் குடும்பம் பற்றி?

தமிழ்நாட்டில் படிக்கும்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம்.காம்., படித்த தாட்ஷாயணி என்பவரை மணந்து கொண்டேன். திருமணமாகி நான்காண்டுகள் ஆகின்றன. ஒரே ஒரு மகன். அவனும் நன்கு தமிழ் பேசுவான்.

---

குறிப்பு : ஜப்பானியர் உயர்வுக்கு அவர்களின் தாய்மொழிப் பற்றும் ஒரு காரணம் என்று மேடைகளில் பேசக் கேட்டிருக்கிறோம். ஜப்பானிய நண்பரை நேர்கண்ட போது அதனைக் கண்கூடாக உணர்ந்தோம்.

சந்திப்பு :ஆசிரியர் குழு

## இவர்கள்...

@ இத்தாலியர்கள்--
@ ஜெர்மானியர்கள்--
@ அரேபியர்கள்--
@ எகிப்தியர்கள்--
@ ஆங்கிலேயர்கள்--
@ சோவியத்தியர்கள்--

## வரதட்சணை

மருத்துவரால்
குணப்படுத்தமுடியாத
மணமகனின்
மலட்டுத்தன்மை

- எஸ். விஜயக்குமார்
இளங்கலை வரலாறு (நிறை)

## ஹைக்கூ...

கற்களால் ஆன
சகாரா பாலைவனம்
என் ஊரின் சாலை



ஜி.விஜய்
இளம் வணிகம் (இடை)



## தேர்வு



வாழ்க்கைப் பாதையைத்
தேர்தெடுக்க
மூன்று மணிநேர
அவகாசம்

ஆர்.விஜயலெட்சுமி
இளம் வணிகமேலாண்மை (நிறை)

## சாதிக் கலவரம்



ஏன் சாலையோர மரங்கள் பின்னோக்கி
ஒடுகின்றன
சாதிக் கலவரத்தால் வெட்டுண்டு விடுவோமா?
என்ற பயமோ?
(பேருந்தில் பயணம் செய்த சிறுவனின் எண்ணம்)

ம.இராஜராஜசோழன்
இளம் தாவரவியல் (முதல்)

## ... இந்த மாதிரி

- அழகுணர்ச்சி மிக்கவர்கள்..
- எதிலும் ஆசை மிகுந்தவர்கள்.
- பெரிதுபடுத்திப் பேசுபவர்கள்.
- ரகசியத்தைக் காப்பவர்கள்.
- அதிகாரப் பிரியர்கள்.
- சோகத்தைச் சித்திரிப்பதில் வல்லவர்கள்.

- எம்.ஹேமமாலினி
இளம் வேதியியல் (இடை)

☎ 21639

டிஜிட்டல் போட்டோ
வீடியோ
லேமினேஷனுக்கு

டிஜிட்டல்
ராஜ
ஸ்டுடியோ

16, ராஜ் பில்டிங் மாடியில்,
பட்டமங்கலத் தெரு,
மயிலாடுதுறை - 609 001

ஒரு நிமிடத்தில் பாஸ்போட் போட்டோ கிடைக்கும்





**நம் கல்லூரிக்கு நேக்கமிட்டி (NAAC) வந்து ஆய்வு செய்து நான்கு நட்சத்திரம் கொடுத்தார்கள். எதனால் ஐந்து நட்சத்திரம் கிடைக்கவில்லை?**

நம்மிடம் Extension Program இல்லை, அதனால் தான் நமக்கு ஐந்து நட்சத்திரம் கிடைக்கவில்லை. இந்த வருடத்திலிருந்து Extension Program கொண்டு வந்து இருக்கிறோம், முதலாண்டு மாணவர்கள் எல்லோரும் கண்டிப்பாகப் போக வேண்டும், ஒரு துறைக்கு ஓர் ஊர் விகிதம் அவர்கள் அதே ஊருக்குத் தொடர்ந்து 5 வருடம் போக வேண்டும். இதன்மூலம் நிச்சயம் பயன் இருக்கும்.

**பொறியியல் கல்லூரியில் முதல்வராக வருவோர் யாருமே நிரந்தரமாக இல்லையே, என்ன காரணம்?**

அது எங்கும் உள்ள பிரச்சனை. அதை நிவர்த்தி செய்திடுவோம்.

**நம் மாணவர்களுகது வெளியில் ரூ.30 கொடுத்து இணையத்தைப் பயன்படுத்துவது மிகக் கடினமாக இருக்கிறது. அவர்களுக்காக நம் கல்லூரியில் இணையவசதி செய்து கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்குமே?**

நானே சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். மூன்று கல்லூரிகளுக்கும் ஒரே இணைப்பில் இணைய வசதி கொண்டுவரலாம் என்று திட்டம் தீட்டியுள்ளோம். இதில் பொறியியல் கல்லூரிக்கு 40 கணிபொறிகள், தொழில்நுட்பக் கல்லூரிக்கு 20கணிப்பொறிகள், நம் கல்லூரிக்கு 40 கணிப்பொறிகள் வழங்கப்படும். அதே மாதிரி நூலகத்தை இன்னும் அகலப்படுத்தும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது.

**நம் மாணவர்களிடம் வெளிப்பாட்டுத்திறன் (Communication Skill) குறைவாக இருக்கிறதே?**

இதற்காகச் சிறப்பு வகுப்புகள் நடத்தலாம் என்று முடிவு செய்துள்ளோம். இளங்கலை முதலாமாண்டு மாணவர்களுக்குக் கட்டாய வகுப்பும், மூன்றாமாண்டு மாணவர்களுக்கு ரூ. 300 ம் கட்டணமாக வசூலித்து வகுப்புகள் நடத்தலாம் என்று இருக்கிறோம். முதுநிலை மாணவர்கள் விருப்பபட்டால் இவ்வகுப்புகளில் அவர்களும் சேர்ந்து பயன் பெறலாம்.

**நம் கல்லூரியில் மருத்துவம் வரப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அது பற்றி ....**

மருத்துவக் கல்லூரி கொண்டுவரலாம். அப்படி கொண்டுவரவேண்டும் என்றால் நமக்கு என்று ஒரு மருத்துவமனை இருக்க வேண்டும். மக்களுடைய ஆதரவு நமக்கு இருக்க வேண்டும் என்றால் முதலில் நாம் இலவசமாக சிகிச்சை அளிக்கவேண்டும். இலவச சிகிச்சை அளித்து மருத்துவர்களுக்கும் ஊதியம் தருவது கொஞ்சம் கடினம். அடுத்தாண்டு பல் மருத்துவம் கொண்டுவந்துவிடுவோம்., அதுபோல் மருத்துவக் கல்லூரியையும் விரைவில் கொண்டுவந்துவிடலாம்.

**கல்லூரிப் பேருந்தில் கட்டணத்தை உயர்த்தியதால் மாணவர்களும், மாணவிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு என்ன காரணம்?**

பேருந்தின் கூட்ட நெரிசலைக் குறைக்கவே கட்டணத்தை உயர்த்தியுள்ளோம். அதுமட்டுமன்றி புதிதாகப் பேருந்துகள் வாங்கவும், அதற்கான செலவுகளை ஈடுசெய்யவும் கட்டணத்தை உயர்த்தியுள்ளோம். மாணவர்கள் கட்டண உயர்வைப் பெரிது படுத்தாமல் ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று நம்புகிறோம். - சந்திப்பு : ஆசிரியர் குழு

# தமிழே! தமிழே!

தமிழே தமிழே - உன்
தலையெழுத்து - இதுதானா?
சிலப்பதிகாரத்தைத் தந்த நீ - இப்போது
சிறிதும் பயன்படாமல் போய்விட்டாயோ
கம்பராமாயணத்தைத் தந்த நீ - இப்போது
கவனிக்கப்படாமல் போய்விட்டாயோ
திருக்குறளைத் தந்த நீ - இப்போது
திரும்பிப் பார்க்கமுடியாமல் போய்விட்டாயோ
தமிழே தமிழே - உன்
தலையெழுத்து - இதுதானா?
இதற்கெல்லாம் காரணம் இந்த
ஆங்கில மோகமே
இனிவரும் நாளில் இந்நிலை
மாறவேண்டும் - தமிழே தமிழே
என் உயிரெனக்கு வேண்டும்!

எல்.முத்தமிழ்
இளம் நுண்ணுயிரியல் (முதல்)





வேற்றுமையில் ஒற்றுமை என்று எங்கெங்கெல்லாமோ பேசுகிறார்கள் ஆனால், அதை நம் கல்லூரி மாணவர்களே இங்கு நிரூபித்து விட்டார்கள். பாருங்களேன்......

(வேறுபட்ட இவர்களின் எண்ணங்களில் என்னவோ சில ஒற்றுமைகள்)

## நட்சத்திரங்கள்...

புள்ளி வைத்துக் கொண்டே
போனால்! கோலம் எப்போது?

ரா.அகிலா
இளம் வணிகம் (நிறை)

## கனவு ...

உறக்கத்தின் போது
இலவசமாக
சினிமா காண்பது

வி.ஜெயந்தி
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

யாருக்குத் திருமணம்
வானத்தில்
சீரியல் லைட்டுகள்

எஸ்.தௌலத்துல் காதிராபேகம்
இளம் வணிகம் (இடை)

வெண்ணிலவின்
வீட்டினிலே,
காலந்தொறும்
கார்த்திகையோ?

தூங்கும் போதும்
ஒரு பொழுதுபோக்கு

ஜி.தேவி
இளம் வணிகவியல் (நிறை)

## வியர்வை . . .

நீரே
என்னை
நெருப்பாய் உருக்கியது!
வற்றிய தேகத்தில்
வற்றாத வியர்வை

டி.ஆர்.ராஜ்குமார்
இளம் வேதியியல் (முதல்)

ஏழை
வாழ்வின் வற்றாத
ஜீவ நதி
வியர்வைத் துளிகள்

ம.ராஜராஜசோழன்
இளம் தாவரவியல்

- இங்கிலாந்து ராணிக்குச் சொந்தமான காருக்கு மட்டுமே நம்பர் பிளேட் பயன்படுத்தப்படவில்லை.
- 5 டிகிரி சென்டிகிரேடில் பாதுகாக்கப்பட்ட இரத்தம் 35 நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.
- சிகாகோ "காற்று நகரம்" என்றழைக்கப்படுகிறது.
- தேனீக்கள் மணிக்கு 65 கி.மீ. வேகத்தில் பறக்கின்றன.

ஜெ.ஜெயபிரகாஷ் ராஜ்
இளம் கணினி (இடை)



# துணுக்... துணுக்...

## 24 மணி நேரத்திற்குள்

நம்மை அறியாமல் நம் உடலில் 24 மணி நேரத்தில் பல நிகழ்ச்சிகள் நடகின்றன.

நமது இதயம் 1,03,689 தடவைகள் துடிக்கின்றன. இரத்தம் உடலினுள் 16,80,00,000 மைல்கள் சுற்றுகிறது.

23,040 தடவைகள் சுவாசிக்கிறோம். 438 கனஅடி காற்றை உள்ளே இழுக்கிறோம். 3¼ பவுண்டு எடை உணவைச் சாப்பிடுகிறோம். 750 தசைகளை அசைக்கிறோம். நகம் 0.000046 அங்குலம் வளர்கிறது. தலைமுடி 0.01714 அங்குலம் வளர்கிறது. 70,00,000 மூளை செல்களுக்கு வேலை கொடுக்கிறோம்.

அ.ஆனந்தகுமார்
இளம் கணினி (இடை)







# பயோடேட்டா



| | | |
|---|---|---|
| பெயர் | : | மயிலாடுதுறை நூலகம் (நாகை மாவட்டக் கிளை நூலகம்) |
| நண்பர்கள் | : | படிப்பதில் ஆர்வம் உடையவர்கள் |
| நீண்ட நாள் கவலை | : | பார்வையில் சிக்காத வகையில் அமைந்துள்ளது பெயர்ப் பலகை. நான் இருக்கும் இடத்தை வைத்து எனை நாடி வருபவர்களின் எண்ணிக்கை குறைகிறது. நாடி வந்தாலும் புத்தகத்தைப் படிக்கும் நேரத்தை விடத் தேடும் நேரமே அதிகம் |
| சமீபத்திய நெருடல் | : | பூங்காபக்கத்தில் இருப்பவன் (நூலகம்) என்னை விடச்சிறியவன். ஆனால் நல்ல முறையில் பராமரிக்கிறார்கள். என்னை விட்டு விட்டார்கள். |
| ஆசை | : | எல்லோரும் என்னைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக ஓரிடம் வேண்டும். |

☎ 22960

தரமான காபி
SRCM
1956 முதல்

மக்களின் சேவையில் இந்த அமைப்போடு ....

# ஸ்ரீ ராமன்ஸ்
## காபி மார்ட்

45-A, பெரிய கடைத் தெரு,
மயிலாடுதுறை - 609 001.

**Weamong**
**House of Quality Goods**

☎ 415170

அனைத்து ரக ஜவுளிகளுக்கு

## ஸ்ரீ ஸத்குரு சில்க்ஸ்

மர்ஹபா காம்ப்ளக்ஸ்,
பெரியகடை வீதி, மயிலாடுதுறை.





விகடன்

தமிழகத்தில் 2067பேர் விண்ணப்பித்ததில் விகடன் நிறுவனத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 42 மாணவபத்திரிகையாளரில் நம் கல்லூரியின் **ம.கலைமணி** (முதுநிலை வனவாழ் உயிரியல்) யும் ஒருவர்.

"நம்ம ஊரு செய்தி " ," தினத்தந்தி " பத்திரிகைகளில் மாணவ நிருபர்கள் வரிசையில் நம் கல்லூரியில் இன்னும் ஒரு பத்திரிகையாளர் " விகடன் " நிருபராகக் கிடைத்தது நமக்கும் நம் கல்லூரிக்கும் பெருமைதான் அவரை நாம் சந்தித்தோம்...

**உங்களுக்கு எப்படி இத்துறையில் (பத்திரிகைத்துறை) ஆர்வம் ஏற்பட்டது?**

தொடக்க காலத்தில் எனக்குப் பத்திரிகைத் துறையில் அவ்வளவாக ஆர்வம் கிடையாது. இந்த ஜூ.வி. மாணவ பத்திரிகையாளர் திட்டத்தைப் பார்த்தவுடன்தான் அதில் ஆர்வம் ஏற்பட்டது. பத்திரிக்கை மூலம் மக்களின் குறைகளை எடுத்துக்கூற முடியும். எனவே இத்துறையில் எனக்கு மேலும் ஆர்வம் அதிகரித்துவிட்டது.

**முதல்கட்ட எழுத்துத் தேர்வுக்கு நீங்கள் அழைக்கப்பட்ட பொழுது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

நான் எதிர்பார்க்காத நிகழ்வு அது. நான் தேர்வு செய்யப்பட்டு அழைக்கப்படுவேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. அப்பொழுது என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

**உங்களைப் போல் பத்திரிகைத்துறையில் சேர விரும்பும் மாணவர்களுக்கு உங்களின் ஆலோசனை?**

மாணவர்கள் அதிகம் பாடபுத்தகத்தை மட்டும் படிக்காமல் அவ்வப்போது பல கதைப் புத்தகம், இன்னும் பல கருத்துள்ள புத்தகத்தைப் படிப்பதன் மூலம் அவர்கள் தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**இளந்தூதுவைப் பற்றி ...**

ஒரு சிறந்த இதழ். இது நம் கல்லூரி மாணவர்களுக்குக் கிடைத்த அறிய வாய்ப்பு, பயன்படுத்திக்கொண்டால் வெற்றி நிச்சயம்.

(இவருடன் தருமபுரம் ஆதினம் கலைக் கல்லூரியில் தமிழ் இலக்கியம் படிக்கும் விகடன் மாணவ பத்திரிகையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. மகேஷ் அவர்களுக்கும் இளந்தூதுவின் வாழ்த்துக்கள்.) - ஆசிரியர் குழு

மூன்றாமாண்டு துவக்க விழா

(13.9.2001)



உங்கள் எண்ணங்கள்
ஈடேற இதோ எங்கள்
கைவண்ணத்தில்

MERLIN'S
MENSWEAR

M

151-A, மகாதானத் தெரு,
வெண்ணிலா திருமண மண்டபம் அருகில்,
மயிலாடுதுறை.








## நெஞ்சு பொறுக்குதில்லையே...

வெளிச்சம் உமிழ்ந்து எரிந்த
தீக்குச்சியில் நமத்துப் போனது மனது,
ஒரு சிறு ஒளி சில ஆயிரம் குழந்தைகளுக்குக்
கக்கிப்போன, இருளை எண்ணி...
தீபமாய் ஒளிர வேண்டியவர்கள்
தீப்பொறிக்காய் கருகியது போதும்.
இறைவா! விடுதலை கொடு!
கந்தகக் காற்றிலிருந்து
எம் பிஞ்சு நாசிகளுக்கு...

நீ. சங்கீதா
முதுநிலை கணினி (நிறை)

## ஆறுவகை முட்டாள்கள்

1. நேற்று செய்த தப்பைத் திருத்திக் கொள்ளாதவர்கள்.
2. வெற்றி பெறும் ஒவ்வொருவருக்குப் பின்னும், யாராவது ஒரு ஆள் தள்ளி விட இருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள்.
3. அவசியமானால் தன்னுடைய மனத்தைமாற்றிக்கொள்ளத் துணிவு இல்லாதவர்கள்,
4. அதிர்ஷ்டம் வரட்டும் என வெறுமனே காத்திருப்பவர்கள்.
5. இது என்னால் முடியாது என நுனி நாக்கால் கூறி விட்டுப் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்குபவர்கள்.
6. தேவை இல்லாத இடங்களில் பணத்தை வாரி இறைத்து விரையம் செய்பவர்கள்.

த. சண்முகப்பிரியா
இளம் வணிக மேலாண்மை (இடை)

**APTIM**
**COMPUTER NETWORKS**
*Always one step ahead..*

ASP
XML
WAP
E-COM
SQL SERVER
JAVA

**COURSE HIGHLIGHTS**
- HTML
- DHTML
- VB SCRIPT
- JAVA SCRIPT
- CORBA
- PERL
- C#
- Oracle 9i
- CGI
- COLD FUSSION

**Diploma Courses :**

HDIT - Honours Diploma in Information Technology
DJP - Diploma in java Programming

**PG DIPLOMA IN E-COM**

**Knock At :**
APTIM COMPUTER NETWORKS
#69, Mahadana Street, Mayiladuthurai - 609 001.
☎ 04364 - 29469 E -mail : aptimnet@rediffmail.com





# என்ன ஒரு ஷாட்

"6 பந்து 11 ரன்" ஆட்டம் உச்சக்கட்டத்தை எட்டியது. வென்றால் உலக சாம்பியன் என்ற பட்டம். ஏனென்றால் இது உலகக் கோப்பையின் இறுதி போட்டி.

இதற்கிடையில் விளம்பரங்கள் இருந்தும் கவனம் சிதறாமல் உலகத்தின் கண்கள் தொலைக்காட்சியின் முன். இடையே அந்த குறிப்பிட்ட அலைவரிசையை மாற்ற நினைத்த "ரிமோட்"க்குத் தோல்வியே. இப்போது கேமரா மைதானத்தில். ஆங்காங்கே சில ரசிகர்கள் தங்கள் வேலையைத் தீப்பெட்டியின் உதவியுடன் நன்றாகவே கவனித்தார்கள். இன்னும் சிலர் தத்தம் நாட்டின் கொடிகளை எடுத்துக் கொண்டு வலம் வந்து கொண்டிருந்தனர். பேட்ஸ்மென்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்ததையும் எதிரணியின் தலைவன் பந்து வீசுபவனுக்கு ஆலோசனை சொல்வதையும் துளியும் விடாமல் அப்படியே விழுங்கிக் கொண்டிருந்தது கேமரா.

இப்போது உங்கள் கண்முன் ஒரு நாள் ஆட்டத்தின் பரபரப்பான கடைசிப் பகுதி. பேட்ஸ்மேனை நோக்கி முதல் பந்து வந்தது. அதை அவன் 2-ஆக மாற்றினான் . இப்போது 5பால் 12 ரன், மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. பந்து வீசுபவன் தனது இரண்டாவது பந்தை வீச அது கீப்பரின் கைகளில் கேட்ச்சாகமாறிக் கொண்டது. மீண்டும் பதட்டத்தைக் குறைக்க விளம்பரங்கள். தற்போது 4-பால் 9.

மூன்றாவது பந்து. பார்ப்பவர்கள் நாற்காலியின் நுனிக்கு வந்தனர். பேட்ஸ்மேன் அந்தப் பந்தை அடிக்கவே அது விளிம்பில் பட்டு கீப்பர் தலைக்குச் சற்று மேலே சென்று நான்காக அமைந்தது. கரவொலியில் மைதானமே அதிர்ந்தது.

இறுதியில் 2-பால் 5 ரன். பேட்ஸ்மேன் ஆடுகளத்தைத் தனது மட்டையால் சரிசெய்துவிட்டு மீண்டும் தனது எல்லைக்கு வந்தான். பந்து வந்தது. பேட்ஸ்மேன் தனது மட்டையை ஓங்கினான். மைதானத்தில் மயான அமைதி...

திடுக்கென்று "டேய், சிவா! எழுந்திருடா. மணி 8 ஆகிறது. காலேஜூக்குப் போக வேண்டாமா? இதுக்குதான் சொன்னேன். நைட் மேட்ச் பார்க்காம சீக்கிரமா படுன்னு! இனி நீ எங்கே காலேஜூக்குக் போறது. இன்னிக்கு மட்டும் கடையைப் பார்த்துக்க."

இப்படித்தான் பல சிவாக்கள் உள்ளனர். தங்கள் வாழ்க்கையைக் கனவுகளாக்கி! சற்று யோசியுங்கள், கடை நிரந்தரமாகாமல் இருக்க.

எஸ்.பி. செந்தில்
இளம் வணிகம் (இடை)

# பெருமிதம் கொள்வோம்!

நம் கல்லூரியின் பெருமைகளுக்கு இன்னும் பெரு சேர்க்கும் வண்ணம் இன்று நம் கல்லூரி விலங்கியல் துறை தற்போது ஒரு **திட்டம்** (Project) கிடைத்துள்ளது. இதன் சிற என்னவென்றால் மீன் மற்றும் வனவிலங்கியல் சார்ந்த (Uni States Fish & Wildlife Service) அமெரிக்க நிறுவனத்திடமிரு இத்திட்டம் கிடைத்துள்ளது.

இத்திட்டம் கல்லூரியின் முன்னாள் மாணவ திரு. சிவகணேசன் அவர்களின் முழு முயற்சியில் கிடை ஒன்றாகும். இவரோடு சேர்ந்து பணியாற்றுவோர் (Project Te நம் கல்லூரி விலங்கியல் துறை பேராசிரியர் முனை கே.தியாகேசன், முனைவர் எல்.பால்ராஜ் (ஊ வனவிலங்கியல் துறை). முனைவர் வி.கிருஷ்ணமூர் (யானைகள் மருத்துவ நிபுணர்) இத்திட்டத்திற்குச் சுமார் 55 லட் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இரண்டு திட்டங்கள பிரிக்கப்பட்டுள்ளது. (1. People Participatary Approach in Eleph Concervation, 2. Training for Forest Field Staff for Eleph Concervation)

இதில் முதல் திட்டம் "சத்தியமங்கலம்" காட் பகுதியிலும் இரண்டாவது திட்டம் "முதுமலை" காட்டி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக சுமார் 15 லட்ச ரூ அளவிற்கு ஆய்வுக்கு வேண்டிய உபகரணங்கள் (Fi Equipments) வாங்க ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போ ஒரு ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பின் இதுவே மே 7 ஆண்டுகள் வரை நீடிக்கவும் வாய்ப்புள்ளதா சொல்லப்படுகிறது.

இத்திட்டத்திளை வெற்றிகரமாக செய்து முடி உங்களுடன், இளந்தாதுவின் வாழ்த்துக்க தெரிவித்துக்கொள்கிறோம்.

-ஆசிரியர் கு

## சிகப்பு ரோஜா



உன் இதழுக்கு
லிப்ஸ்டிக்
எங்கு வாங்குகிறாய்?

எஸ்.தௌலாத்துல் ஹாதி
பேகம்
இளம் வணிகவியல் (இடை)







## தந்தை மகனுக்கு ஆற்றிய உதவி

அன்றென் தந்தை எஜமானனிடம் கையைக்
கட்டியதால்
இன்று நான் கல்லூரிக்கு "டை"யைக்
கட்டுகிறேன்.

எஸ்.பி.விஜயபாலன்
இளம்பொருள் (இடை)

## ஆகஸ்ட் 15



அன்னியரிடமிருந்து
அகிம்சையால் வாங்கிய சுதந்திரத்தை
அரசியல்வாதிகளிடம் அடகு வைத்துவிட்டு
இம்சைபடும் இனிய நாள்

எஸ்.விஜயகுமார்
இளம் வரலாறு (நிறை)

## சிதறல்

சிதறிய தேங்காய்க்குச்
சிதறி விழுந்தார்கள்
அனாதைச் சிறுவர்கள்

இரா.ரம்யா
இளம் வணிகம் (நிறை)



காதொளிரும் இமயமலையும் கைக்கு நதி
இந்துவும்
கருணைமார்பின் மீது ஒளிர் தாஜ்மஹாலும்
மெல்லிடையில் நர்மதையும் குமரி இன்ப
போதொளிர் பூந்தொளினையும் பொன்முடி
காஷ்மீரையும் பொலியச் சூடி நிதியொளிர்
செங்கோலாய் டெல்லியைத் தாங்கு இந்தியா
நீடு வாழ்க.

ப.மங்கையர்க்கரசி
இளம் வேதியியல் (முதல்)

# சொந்தம்

சொந்து கொஞ்சம்
வைச்சிந்திருந்தா சொந்தகாரன்
மதிப்பான் !

எந்தச் சொத்தும்
இல்லையின்னா ஏளனமா
நினைப்பான் !

தடுக்கி விழும்
நேரத்தில சந்தோஷமுன்னு
இருப்பான் !

விழுந்த நாம
எழுந்திருச்சா விதவிதமா
அளப்பான் !

மாடிவீட்ட கட்டிபுட்டா
இடிஞ்சி போக
நினைப்பான் !

கூரை வீட்டில்
குடியிருந்தா
சொந்தமான்னு -முகம்
சுழிப்பான் !

வறுமையின்னு
வந்து நின்னா
வாசகதவே
அடைப்பான் !

செல்வந்தனா
போயி நின்னா
ஒடி வந்து
அணைப்பான் !



பா. கண்ணன்
இளம் கணினி (நிறை)






☎ 24954

NATIONAL
WATCH HOUSE

*Dealer :*






- HMT
- TITAN
- CITIZEN
- SAMAY
- SONATA

ORPAT® *Scientific Fx100 Calculators*
ORPAT® *Telephones*

(HMT Authorised Service Centre)

No.10, Raj Building,
Pattamangala Street,
Mayiladuthurai - 609 001.

மயிலாடுதுறையில்
பத்து வருடங்களுக்கு மேலாக ஸ்டிக்கர்
தொழிலைச் செய்து வரும் நிறுவனம்



தசன் டிசைன்ஸ்

கம்ப்யூட்டர் சைன்மேக்கிங் சிஸ்டம்ஸ்

15-A, கச்சேரி ரோடு மயிலாடுதுறை.

விஷுயல் சைன் போர்டு, சன்கண்ட்ரோல்பிலிம், ஸ்கிரீன் பிரிண்டிங், டூவீலர் மற்றும் கார்களுக்கு நம்பர் பிளேட் கூலிங் பேப்பர் சிறந்த முறையில் ஒட்டித் தருகிறோம்.





# புதுவை(மை) ரிப்போர்ட்

பொதுவாகப் பாண்டிச்சேரி என்றாலே நமக்கெல்லாம் நினைவிற்கு வருவது மதுபானங்களே. இந்த வட்டத்திக்குள்ளேயே இருந்துவிட்ட நாம் நம் மொழிவழி சொந்தங்களும் நம் பக்கத்து மாநிலமுமான புதுவை பற்றிய செய்தியை நாம் நமக்கே உரிய ஒரு வித்தியாசமான கோணத்தில் நம்மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் இங்குத் தந்துள்ளோம்.

எல்லாவற்றுக்கும் முன்பாகக் கடற்கரைக்குச் சென்று நல்ல காற்றை வாங்கி விட்டுக் கரையில் நின்றுகொண்டிருந்த நம் 'அண்ணலை'ச் சந்தித்து விட்டு நேரு வீதியில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவினுள் (BOTANICAL GARDEN) நுழைந்தோம்.

ஏ மனிதா! உன்னைவிட உயர்ந்தவன் நான் என்று சொல்லும் நம் கழுத்தை முறிக்கும் உயர்ந்த மரங்களும் கூடவே, நாங்கள் ஒன்றும் பெரியவர் இல்லை என்று எளிமையாய் நிற்கும் மரங்களும் ஒவ்வொரு மரத்திலும் ஒரு தகரப் பலகையில் சிறு எழுத்துக்கள். உன்னிப்பாய் கவனித்ததில் எல்லாம் தாவரவியல் பெயர்கள் (BOTANICAL NAME) TERMIALLA BELERICA, MINUSOPUS இப்படி என்னென்னவோ ஏராளமாய். அதிலும் இளவயது முதல் முதிய வயதுடைய மரங்களும் தனித்தனியே, ஆக சிறியவர் முதல் பெரியவர் வரை கூடி வாழும் கூட்டுக் குடும்பமாக நமக்குப் பட்டது. இதெற்கெல்லாம் நடுவே நம் மனிதர் பழக்கம் போல் சிலையாகி விட்ட ஓர் மரம். விசாரித்ததில் பல ஆண்டுகள் வயதாகும் அம்மரம் இன்று சில மாற்றங்களால் கல்லாகி விட்டதாம்.

இப்படி இதை எல்லாம் ரசித்தபடி நடைபோட்ட நம் கால்கள் சோர்வடையவே சற்று உட்காரலாம் என்றெண்ணி தூரத்தில் தெரிந்த ஒரு திண்ணையை நோக்கி நடைபோட்டோம். நெருங்க நெருங்க அங்கே பல குழந்தைகள் சேர்ந்து விளையாடும் சத்தம் கேட்டது. கூடவே, சில ஒலிப்பேழைகளுக்குப் போட்டிப் போடும் சலங்கை ஒலிகள், சில மிருதங்க ஓசை மற்றும் சில குழந்தைகள் பாடும் ஓசை, ஊ_ஆ_ என்று சிறுவர்கள் கராத்தே செய்யும்

ஓசை இன்னும் எத்தனையோ இதுபோன்ற ஓசைகள் .... இவை என்ன? ஒரு பல்கலைக்கழகம் போல் தோன்றவே உள்ளே நுழைந்தோம்.

நாம் வருவதையோ.. பார்ப்பதையோ.. பற்றிச் சிறிதும் சட்டை செய்யாத சிறுவர்கள் கவனத்தைச் சிதறடிக்காமல் தாங்கள் ஈடுபட்ட பயிற்சியில் மூழ்கியிருந்தனர். இதை பார்த்துக் கொண்டிருந்த நம் கண்களில் ஒரு பலகை சிக்கியது. அதில் "ஜவகர் பால் பவன்" என்று எழுதியிருந்தது அதைப்பற்றி விசாரித்ததில், நமக்குக் கிடைத்தது ............

அது ஒரு சிறுவர் இல்லம். அங்குப் பள்ளியில் படிக்கும் 6 முதல் 16 வயது வரையான சிறுவர் சிறுமியர் வந்து சேரலாம். அவர்களுக்கு எந்த ஒரு தடையோ கட்டுப்பாடோ கிடையாது. அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அவற்றை அங்கே கற்றுக்கொள்ளலாம். இதுபோல் இந்தியாவில் மொத்தம் 70 இடங்கள் இருக்கின்றனவாம். இங்குப் பலவிதமான கலைகளையும் கற்றுக்கொள்ளும் சிறுவர்கள் அதிகம் செலவில்லாமல், அவற்றை அரங்கேற்றமும் செய்கிறார்கள். இங்குப் பெற்றோர் ஆசிரியர்க் கழகம் என்று ஒன்று உண்டு. அதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு ரூ. 100/- வசூலிக்கிறார்கள். மேலும் இந்த மையத்தின் சேவையைப் பாராட்டி மத்தியஅரசு சுமார் 2 கோடி பரிசாய் வழங்கியுள்ளது. மேலும் "INTERNATIONAL CHILD CONFERENCE" என்ற குழந்தைகள் மாநாட்டில் கலந்துகொண்ட 9 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அதில் அதிகபட்சமாக 5 குழந்தைகள் புதுவை "பால் பவனில்" இருந்து சென்றுள்ளார்கள். தேசத்தின் எதிர்காலத் தூண்களை வலிமைப்படுத்தும் சேவையில் இறங்கியிருக்கும் அம்மையத்திற்கு இளந்தாது சார்பாக நம் வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்டு கிளம்பினோம்.

மறுநாள் காலை கடற்கரையை ஒட்டியுள்ள ஓர் அமைதிப் பூங்கா - "அரவிந்தோ" ஆசிரமம். வெளியில் அறிவிப்பு பலகை பார்வை நேரம் : காலை 8-12 மாலை 2 - 6. என எழுதியிருந்தது. எட்டு மணிவரை காத்திருந்து உள்ளே சென்றோம்.






# JEECCorp

**Internet Browsing Rs. 30/- per hour.**
**Rs. 25/- per hour for Membership**

JEECCorp welcomes you to take part in
Gateway to our home town

**Place your advertisements in**
**http://www.mayiladuthurai-info.com**
**at free of cost**

- Computer Education
- Internet Browsing
- Software Developments & Web desigining
- Hardware Servicing & Maintanence

**Contact for more Details : J.Stephen raj**

**Phone ; 40654, 42206, 41955, 42176**
**http://www.jeeccorp.com**

"FLY HIGH : SKY IS THE LIMIT FOR US"

**Project work under taken**

காற்று கூட ஓசை எழுப்ப சங்கடப்பட்டுவிட்டது போலும், அவ்வளவு அமைதி. உள்ளே அந்தக் கருணைத் தாயின் சமாதி மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அதனை அடுத்து சில அறைகள் அவற்றில் ஆசிரம சம்பந்தப்பட்ட பல புகைப்படங்கள் பார்வைக்கும், விற்பனைக்கும் வைத்திருந்தனர். சிலவற்றை வாங்கிக் கொண்டு வெளியே வந்தோம்.

மனத்தில் கனமான அமைதியுடன் அடுத்த வீதிக்குச் சென்றோம். அங்கே ஒரு பிள்ளையார் கோயில். பெயர் "மனக்குள விநாயகர் கோயில்" அக்கோவிலின் வரலாறு தான் அதன் சிறப்பாம். ஒரு பெரியவர் சொன்னார். சிற்பி ஒருவரால் வடிவமைக்கப்பட்ட ஒரு பிள்ளையார் சிலை, சிறு தவறு நேர்ந்துவிட்ட காரணத்தால் கடலில் வீசப்பட்டுவிட்டதாம். மறுநாள் அச்சிலை அதே இடத்தில் இருக்கவே ஆச்சர்யம் கொண்டு அன்று ஆசிரமத்தை வழிநடத்திய "அன்னையிடம்" இதனைச் சொல்லவே அவ்விடத்தில் கோயில் கட்ட இடம் கொடுத்து உதவிகள் செய்தார். இந்த வரலாறு உண்மையோ, பொய்யோ ஆனால், அங்கு நம்மால் அன்றைக்கே அரங்கேறிவிட்ட ஒரு சமத்துவ புரத்தைப் பார்க்க முடிந்தது.

பின் அங்கிருந்து நகரத்தின் மையப் பகுதிக்குப் பயணமானோம். "பாவேந்தர் நினைவரங்கு" என்ற அறிவிப்புப் பலகை நம்மை உள்ளிழுத்துச்சென்றது. உள்ளே பாவேந்தரின் பாடல்வரிகள் ஒலித்தபடி. அவரின் சிறுவயது முதல் அவரது இறுதி ஊர்வலம் வரையான படங்கள் வரிசைப்படுத்தப் பட்டு. அவரின் வாழ்க்கையைக் . காட்டிக்கொண்டிருக்கின்றன. அவர் காசுக்கடைத் தொகுதி வேட்பாளராக இருந்தது முதல், அவரின் மகள் திருமணம், வாழ்த்துச் செய்திகள், அவரின் பத்திரிகைகள், அவர் ஆசிரியராய் பணியாற்றிய விவரங்கள் யற்றும் அவர் உபயோகித்த உடமைகள் என நம்மை அவர் காலத்திற்குச் சில மணித்துளிகள் அழைத்துச் சென்றன.

பாரதிதாசன் நினைவுகளோடு ஓரிரு வீதிகளைக் கடந்து சிவன் கோயில் வீதி வந்தோம். பாவேந்தனைப் பா எழுதத் தூண்டிய அந்த மகாகவியின் நினைவகம் சென்றோம். சட்டென்று நம்மைத் திரும்பிப் பார்க்க வைத்த பாரதியின் கம்பீரத் தோற்றம் சுவரில் சித்திரமாய். உள்ளே சென்று அவரின் கடிதங்கள், கவிதை வரிகள், கையொப்பங்கள் எனப் பலப்பல காகிதங்கள் சட்டத்தினுள் தொங்கியதை தம் கண்கள் மேய்ந்தன. மேலும், பாரதியின் உண்மையான புகைப்படம், அவருடன் போராடிய பல களந்தூண்கள், எல்லாமே அந்த நினைவகத்தில் சிப்பியிலிட்ட முத்தாய். இவற்றைப் பாதுகாத்து நினைவகம் அமைத்துப் பராமரிக்கும் பாண்டிச்சேரி அரசுக்கு இளந்தாதுவின் மானசீக வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினோம்.

நகரத்திலிருந்து சில கிலோமீட்டர்கள் தள்ளியிருக்கும், அந்தச் சர்வ சமய ஆலயம். அதன் பெயர் "ஆரோவில்". பாண்டியிலிருந்து "காராப்பட்டு" செல்லும் பேருந்து நம்மைப் பெரிய முதலியார் சாவடியில் இறக்கிவிட. விசாரித்ததில், "இதோ இப்படியே ஒரு முக்கா கிலோமீட்டர் நடந்தா குயிலாப்பாளையம் வருந்தம்பி. அங்கதாங்க ஆரோவில் இருக்கு". என்றார் ஒரு பெரியவர். "ஞாயித்துக் கிழமைங்கறதால கொஞ்சம் கூட்டமா இருக்குந்தம்பி" இது மற்றொருவர். அவர் சொன்னது போலவே அங்கே பல வரிசைகளில் கூட்டம் கூட்டமாகச் சிறுவர் முதல் பெரியவர் வரை. இந்த வரிசையில் உள்ளவர்கள் இம்மாநிலத்தைச் சார்ந்தவர்கள், இம்மதத்தைச் சார்ந்தவர்கள், இந்நாட்டைச் சார்ந்தவர் என்று பிரித்துச் சொல்ல முடியாது. ஒவ்வொரு வரிசையும் ஒரு கதம்பமாய், பல மொழியினர், பல இனத்தவர், பல நாட்டவர் என்று. நாமும் ஒரு வரிசையில் இணைந்து கொண்டோம். "எல்லாரும் கொஞ்சம் கவனிங்க" என்று தமிழில் ஆரம்பித்து இந்தி மற்றும் ஆங்கிலத்தில் "Your Attention, Please" என்று முடித்தது ஒரு குரல். திரும்பினோம். ஆரோவில்லின் பணியாளர் ஒருவர் உள்ளே செல்வதற்கான விதிமுறைகளைத் தமிழிலும் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மாற்றி மாற்றிச் சொன்னார்,

அவற்றில் சில...

உள்ளே போகும் போது யாரும் பேசக்கூடாது. அமைதியாகவே செல்ல வேண்டும். ஒரு குடும்பத்தில் யாரேனும் ஒருவர் பேசினாலும், உடனே அக்குடும்பத்திற்கு உள்ளே செல்ல அனுமதி மறுக்கப் பட்டு விடும். இப்படி அவர்களின் பட்டியல் நீண்டுக் கொண்டிருந்தது.

(தொடர்ச்சி பக்கம்-98)

உரிமை : ஜி.வாசுதேவன் ☎ 21210

அழகான வீட்டுக் கதவுகளுக்கு மரத்தில்
அழகிய பூ வேலை செய்ய

**நியு திருச்சி கார்விங்**



99, பூக்கடைத் தெரு, கூறைநாடு,
மயிலாடுதுறை - 609 002.







Provide is ours, Progress is yours

**PROFESSIONAL SOFTWARE & SYSTEMS**

*A Revolution in Computer Education*

- Round OnClock Lab
- Excellent Coaching
- Separate System
- Internet Browsing
- DTP & Project Work
- Personality Developments
- Spoken English Courses

***Courses Offered***

| | | |
|---|---|---|
| DCA | FOXPRO | DWEB |
| PGDCA | PGCC | MDDBM |
| UGCC | AUTOCAD | DTP |
| MS-OFFICE | HSCC-1 | TALLY-6 |
| DJP | HSCC-II | DOOPS |

**Please Contact :** ☎ : (04364) 42997

6/S1, VRS Complex, Pattamangala Street,
Near Taluk Office, Mayiladuthurai.
E-mail : psscomputers@vsnl.net, pss@usa.net

மயிலாடுதுறையில் புதிய தொழிற்கல்வி . . .

## பெஸ்ட் காலேஜ் ஆப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் & கேட்டரிங் டெக்னாலஜி

ரசாக் டவர், 15 கச்சேரி ரோடு. மயிலாடுதுறை.
☎ : 25152

சிறப்பம்சங்கள்

- 10th, +2 முடித்த மாணவ - மாணவியருக்கு ஓர் அரிய வாய்ப்பு
- படிப்பு முடித்தவுடன் உள்நாடு மற்றும் வெளி நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தரப்படும்.
- ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தனித்தனியே ஹாஸ்டல் வசதி உண்டு.
- 100 சதவீத வேலை வாய்ப்புக் கல்வி.

ஓராண்டு கேட்டரிங் படிப்புகள்

| வ.எண். | படிப்புகள் | தகுதி |
|---|---|---|
| 1. | உணவு தயாரித்தல் | 10ம் வகுப்பு |
| 2. | உணவு & பானங்கள் பரிமாறுதல் | 10ம் வகுப்பு |
| 3. | மனை பராமரித்தல் | 10ம் வகுப்பு |
| 4. | வரவேற்பு நிர்வாகம் | 12ம் வகுப்பு |

மேலும் விவரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் பெற நேரில் அணுகவும்

முனைவர் அ.அய்யூப்
சேர்மன்
ஆசிரியர், நம்ம ஊரு செய்தி,
மயிலாடுதுறை.






## ஏழைச்சமூகமே எழுந்து வா.

வறுமைச் சாக்கடையில் நீ
ஏன் புழுப்போல் துடிக்கிறாய்?
நீ நீராடத்தான் கங்கையும்
காவிரியும் கரைபுரண்டோடுகின்றன.

தென்றல் வீசுவது மாளிகையில்
மங்கையர் கூந்தல்
உலர்வதற்கு அல்ல - உன்
உழைப்பின் வேர்வை உலர்த்தத்தான்,

உன் தலை தொட்டால்
கோடி புண்ணியம் என்பதால்தான்
மழைகூட மண்ணுக்கு
இறங்கி வருகிறது.

துயரக்கடலில் நீயேன்
தாழ்ப்போகிறாய்? முயற்சிப்படகை
வைத்துக் கரையேறி வா - அந்தக்
கடலே உனக்கு மகுடம் சூட்டும்.

ஏழைச்சமூகமே எழுந்து வா!
அந்த வானைப் பிய்த்து வந்து - நம்
குடிசைக்கெல்லாம்
கூரை வேய்விப்போம்.

யோ. செந்தமிழ்குமார்
இளம் வேதியல் (இடை)



### விலை உயர்ந்த மோதிரம்

உலகிலேயே மிக விலை உயர்ந்த மோதிரத்தைத் தன் விரலில் அணிந்து கொண்டிருப்பவர் எலிசபெத் டெய்லர். இந்த மோதிரத்தின் விலை சுமார் 10 இலட்சம் டாலர். அதாவது 75 இலட்ச ரூபாய். 70 காரட் வைரத்தால் செய்யப்பட்டது.

எல்.டி. இலெனின்.
இளம் கணினி(இடை).

# சர்வே...

அன்று ஆக்ரா வாஜ்பாய் முஷ்ரப் பேச்சுவார்த்தையில் எடுக்கப் படாத சில தீர்மானங்கள் இன்று நம் மாணவர்கள் கையில் ...

கேள்வி : ***நீங்கள் பிரதமராக இருந்திருந்தால் என்ன முடிவு எடுத்து இருப்பீர்கள்?***

இராணுவ தீர்வே சரியான முடிவு

க.காளமேகம் — இளம் இயற்பியல் (இடை)
எஸ். மணி — இளம் தாவரவியல் (இடை)

நல்லுறவு ஏற்பட வாய்ப்பே இல்லை

ஆர். சதிஸ் — இளம் விலங்கியல் (நிறை)

. விளையாட்டை இதனுடன் சம்மந்தப்படுத்தாமல் இருப்பேன்

எ. ரியாசுதின் — இளம் பொருளியல் (நிறை)

அடுத்தத் தேர்தல் இமேஜைக் கருத்தில் கொள்ளாமல் காஷ்மீர் மக்களை மனத்தில் வைத்துக்கொண்டு முடிவு எடுப்பேன்

அ. சித்ரா — முதுநிலை கணினி (நிறை)

இந்தியாவை எதிரியாக நினைக்கும் வரையில் பாக்.உடன் நல்லுறவு என்பது பகல் கனவு தான்.

எஸ். வெங்கடேஷ் — இளம் கணினி (முதல்)

இந்தியா - பாக். பிரச்சனைக்கு ஒரு முடிவு எடுக்காமல் இருக்கமாட்டேன். அராஜகவாதிகளை ஒழித்து, நல்வாதத்தை உருவாக்கி இரு நாட்டுக்கும் உறவுப் பாலத்தை ஏற்படுத்திருப்பேன்

எ.சுதாகர் — இளம் விலங்கியல் (இடை)

நான் இரு நாட்டிற்கும் பாதிப்பில்லாத வகையில் காஷ்மீர் தலைஎழுத்தை அங்கு வாழும் மக்கள் கையில் தந்துவிடுவேன். மற்றபடி பேச்சுவார்த்தை டோட்டலீ வேஸ்ட்.

இ. ஆனந்தி — முதுநிலைகணினி (நிறை)
எஸ். கவியரசு — இளம் இயற்பியல் (முதல்)





இரண்டு நாட்டுக்கும் பொதுவான வேறு ஒரு முக்கிய நாட்டின் அதிபரை வைத்துப் பிரச்சனைக்குத்தீர்வு கண்டுருப்பேன்.

தளபதி. செம்பியன் — இளம் மின்னணுவியல் (இடை)

தீவிரவாதத்தைத் தீவிரவாதத்தால் அழிக்கவேண்டும். நேரடியாகப் போரில் இறங்கி முழு காஷ்மீரையும் நமதாக்கிக் கொள்ளுவோம்

சதீஸ், பழனிவேல், ஞானசேகரன். — முதுநிலை கணினி (நிறை)

கண்டிப்பா காஷ்மீரைக் கொடுக்கமாட்டேன் அதற்குச் சம்மதம்னா வாங்கன்னு சொல்லியிருப்பேன்

கே. சவிதா — இளம் வணிகம் (நிறை)-அ

பிரச்சனைக்குத் தீர்வு காண வரல, அவங்க வீட்டைப் பார்க்கத் தான் வந்தாரு. அவருக்காக நாம் செய்த செலவுகள் எல்லாம் வீண்.

பி. விஜய் — இளம் கணினி (முதல்)

பயங்கரவாதத்தைக் கைவிட்டு வந்தால் தான் பேச்சுவார்த்தை என்று சொல்லியிருப்பேன்

எ. ஷீலா — இளம் கணினி (இடை)

இங்க பேச்சு வார்த்தை நடந்தப்ப எல்லையில சண்டை நடந்துச்சு அதை நிறுத்த முடியுமா என்ற முடிவு தெரிஞ்சதுக்கு அப்புறம் தான் பேசியிருப்பேன்

அமிர்தா — இளம் கணினி (இடை)

எப்படிப் பேசினாலும் எந்த முடிவாயிருந்தாலும் எங்களால காஷ்மீரை விட்டுக் கொடுக்க முடியாதுன்னு சொல்லியிருப்பேன்

கே.செந்தில் — இளம் கணினி (இடை)

# CRESCENT
## COMPUTERS



**Courses Offered:**

Java 2.0, HTML, DHTML, Java Script, VB Script, Oracle 8.0, Visual Basic 6.0, Power Builder 6.0, MS-Office-2000, C/C++, Windows-NT, etc.,

**Special Courses :**

Courses for School & College Students, Working Employees, House Wives and Kids.

**We Offering**

- System Sales and Service
- Computer Peripherals
- Networking
- Software Installation
- Customized Software Development
- Computer ReSales
- Computer Cosumables
- Stationaries
- Contract Based Service (AMC & MMC)

***A to Z Computer Solution Provider***

For More Details Contact:

**Crescent Computers &**
**Crescent Computer Services**

*15, Mahadhana Street, Mayiladuthurai. ☎ 22306*






சரியான முறையில் திட்டமிடவில்லை தவறான அணுகுமுறையினால் தான் தோல்வியடைந்தது. நானாக இருந்திருந்தால் சரியாகத் திட்டமிட்டுச் செயல்பட்டிருப்பேன்.

டி.கே.ராஜேஷ்
இளம் வணிகம் (இடை)

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்தச் சொல்லி அதற்குச் சம்மதம்னா அழைச்சிருப்பேன்.

ஜிவசந்தி
இளம் வணிகமேலாண்மை (முதல்)

ஆழம் தெரியாமல் காலை விட்டுமாட்டிக் கொள்ள மாட்டேன். அங்கு நடக்கும் உண்மை விஷயம் தெரியாமல் எதையும் சொல்ல மாட்டேன்.

சிமகேஷ்பாபு
இளம் விலங்கியல் (இடை)

பாகிஸ்தான் தன் தீவிரவாதத்தை நிறுத்தாவிட்டால் இந்தியாவும் பாகிஸ்தானும் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

ஆர். மணிவேல்
இளம் தாவரவியல் (முதல்)

சமாதானமான முறையில் தீர்வு காண முயற்சிசெய்திருப்பேன்.

ஸ்ரீ.துர்காலெட்சுமி
இளம் வணிகம் (இடை)-ஆ

என்.சரவணன் இளம் தாவரம் (மூன்றா)

ஊரைச் சுத்திப் பார்கிறது இருக்கட்டும், வந்த உடனே பேச்சு நடத்துங்க. வெற்றி அடைஞ்சாதான் ஊரைச் சுத்திப் பார்க்கலாமுன்னு சொல்லியிருப்பேன்.

கமலக்கண்ணன்
இளம் மின்னணுவியல் (இடை)

பேச்சு வார்த்தைக்கு முன்பே சரியா பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்று முடிவெடுத்து அதன்படி நடந்திருப்பேன்.

எம். சுகந்தி
இளம் வணிகம் (முதல்)-ஆ

இந்திய-பாக் இடையே ஏற்பட்ட பேச்சுவார்த்தை இன்னும் முற்றுப் பெறவில்லை, மேலும் இரு நாடு களுக்கிடையே மீண்டும் பேச்சுவார்த்தை தொடர வேண்டும், அதன் மூலம் காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும்.

ஜெ. பாலமுருகன்
இளம் வணிகம் (இடை)

இரு நாட்டுப் பிரச்சனைக்கு முக்கியக் காரணம் என்னன்னு கண்டுபிடிச்சி அதைப் பற்றிப் பேச வேண்டும். அதுக்கு சம்மதிச்சிருந்தா தான் பேச்சு வார்த்தைக்கே கூப்பிட்டிருப்பேன்.

ஆர். பத்மாவதி
இளம் மின்னணுவியல் (இடை)

-சர்வே ஆசிரியர் குழு.

☎ 21143

மயிலாடுதுறையின்
புதிய காலணிகளின் தனி
உலகம்

சூப்பர் வாக்
ஷூ மார்ட்

Bata KANPUR Power
Action ARISTOCRAT Aditi
LIBERTY DIAMOND REX

185, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை.





# சிந்தித்துப்பார்

ஒரு ஓரப்
பார்வைக்குத் தினம்
கால் கடுக்க
நிற்கும் நீ
உன் பெற்றோர்
கால் கடுக்க
நின்று கல்லூரியில்
இடம் வாங்கித்
தந்ததைச்
சிந்தித்துப் பார் !

என் இதயம்
என்னிடம் இல்லை
என் உயிர் அவள்(ன்)
என்று வர்ணிப்பதை
விட்டு விட்டுத்
தன் உயிர் கொடுத்து
உன்னை ஈன்றவள்
நிலையை எண்ணிச்
சிந்தித்துப் பார் !

பார்க்கும் திசை
எல்லாம் அவன்(ள்)
முகம் என்று
என்னும் நீ
உன்னைப் பார்த்துப்
பார்த்து வளர்த்த
உன் தந்தை
சிந்திய இரத்தத்
துளிகளைச்
சிந்தித்துப் பார்!

எதிலும் அவள்(ன்)
பெயர்; புத்தகத்திலும்
கல்லூரி மேசையிலும்
சுவரிலும்
இப்படி இருந்தால்
எதிர் காலத்தில்
உன் பெயர்
நிலைத்து இருக்குமா?
சிந்தித்துப் பார் !

தவறுகளைச் சுட்டிக்
காட்டுவது சுலபம்
ஆனால்
அதைத் திருத்திக்
கொள்வது கடினம்.
உன் வாழ்க்கை
உன் கையில்
என்பதை விட
உன் குடும்பம்
உன் கையில்
சிந்தித்துப் பார் !

பா. இன்பநிலா
இளம் வேதியியல் (நிறை)

Microsoft Certified
**Support** Center

Microsoft Certified
**Technical**
**Education**
Center

# Maestros

enabling technology for you
Software Training Division

V.R.S. Complex,
No. 5-T-1, III Floor, Pattamangala St.,
Mayiladuthurai.

**Ph : 28406**

Microsoft Certified
Solution Provider

Intranet
Technology
Partner
-Microsoft





## Courses Offered

### Career Course

i) WINPRO
ii) Diploma in Sun Java Technology
iii) Diploma in Microsoft Technology
iv) E-Commerce & Mobile Commerce

and also

C, C++, VB, Oracle, Java, Adv.Java & ASP

**Specialised in**

C#, .net & Bluetooth

### Authorisations :

Microsoft Certified Solution Provider
Microsoft Certified Technical
Education Center
Microsoft Certified Support Center
Internet Technology
Partner-Microsoft

# இணையத்தில் இளந்தூது...

"www.amba am.com" இந்த இணையத் தளத்தில் நம் கல்லூரிப் பற்றியும், நம் "இளந்தூது" பற்றியும் சில செய்திகள் 'இளையர் அம்பலம்' எனும் இணைய பக்கத்தில் (16.01.2001) வெளியிடப் பட்டுள்ளது. 'மின்னம்பலம்' தமிழ் இணையப் பத்திரிக்கைகளின் முன்னோடி என்பதையும், எழுத்தாளர் 'சுஜாதா' உள்ளிட்டப் பிரபலங்களை தன் ஆலோசனைக் குழுவில் கொண்டுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். இந்த செய்தியினை உங்களுடன் பகிர்ந்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறோம். இதில் 'ஜோல்ராஜ்' எனும் ஒரு கற்பனை பாத்திரம் நம்மைப்பற்றிச் சொல்லுகின்ற செய்திகள் இங்கு தங்களுக்காக....

'இளந்தூது' பேட்டா



இந்தக் கல்லூரி மாணவர்களால் வெளியிடப்படும் 'இளந்தூது' என்ற சிற்றிதழ் தங்கு தடையின்றி 12 வருடங்களாக வெளிவருகிறதாம். ஆச்சரியப்பட்டுப போனேன்.

திரவழிக்கப்பட்டு வரும்



இதழை வெளியிடும்போது இலக்கிய உலக ஜாம்பவான்களை அழைத்து அவர்கள் மூலம்தான் வெளியிடுகிறார்கள். நல்ல வேலை அடுத்த வெளியீட்டுக்கு என்னை சீஃப் கெஸ்ட்டாக கூப்பிடவில்லை. உங்களுக்குத் தான் தெரியுமே என் தமிழ். இலக்கியப் புலமைப் பற்றி.





கவிஞர்கள் அப்துல் ரகுமான். மு.மேத்தா. எழுத்தாளர் சு. சமுத்திரம். ஆகியோர் 'இளந்தூது' வெளியீட்டு விழாக்களில் கலந்துக்கொண்டு மாணவ. மாணவிகளையும். 'இளந்தூது'வையும் சிறப்பிக்கிறார்களாம்.

நம் கல்லூரி மற்றும் நம் 'இளந்தூது' பற்றிய செய்திகளை வெளியிட்டு நம்மை பெருமைப்படுத்திய "ambalam.com" க்கு நம் நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.






# SSC

# SUN SOFTWARE COLLEGE

**Computer Education - Training Centre**

50% of offer for all course with
Course Material & 1 hour
Internet free

## JOIN SSC

## GET PROFESSIONAL CARRIER

| | |
|---|---|
| PGDCA | PG DHT |
| DCA | Web designing & developing |
| Diploma in AutoCAD | Dip. in Hardware Technology |
| Diploma in Accounting Package | Dip. in RDBMS |
| Diploma in MS-Office | Dip. in client Server Tech. |
| Adv.Dip. in Java Programming | |

sun win the World

**Razak Tower, #15, Cutchery Road,**
**(Near Arunpriya Hospital)**
**Mayiladuthurai - 1**
**☎ : 26975**

# விவேகானந்தா



**பேப்பர் & ஸ்டேஷனரி மார்ட்,**
**116, நெ.2, ரோடு, மயிலாடுதுறை.**
☎ : 26593

- Students Note Books
- Account Books & Office Envelope Covers
- Decoration flowers, all metallic items-Welcome Happy New Year & Birthday, X-Mas etc.,
- Paper plates, Seasons greeting
- PVC pouches & folders
- Quality Office files, Lever, Timex, Box, Laminated & College files, etc.,
- All office Stationery, pen & Ball pen items A to Z

# AGNI BOOKS

**Raj Building, Mayiladuthurai.**

School, College, Polytechnic, Engineering, Text Books, Guides, General Books.

# ADITYA BOOKS

**S.M.H. Building, Opp : A.V.C. College, Mannampandal.**

College, Polytechnic, Engineering: Text Books, Guides, Note Books & Stationery.






# வாழ்க்கை வெல்வதற்கே

ஒன்றைவிட்டு ஒன்றைப் பிடிக்க முயன்று கடைசியில் ஒன்றையும் பிடிக்காமல் முடிவது இந்த வாழ்க்கை. இப்படிப்பட்ட குறுகிய வாழ்க்கையில் எப்படி வந்தோம் என்பது தான் மனத்தில் எழும் கேள்வி.

வந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம், என்றில்லாமல் "வந்தோம், வென்றோம் வரலாற்றில் இடம் பதித்தோம் என்று வாழ்வது தான் வாழ்க்கை". இப்படிப்பட்ட வாழ்க்கையை மேற்கொள்ள முதலில் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் வேண்டும். மனிதனின் ஆழ்மனத்தில் பொக்கிஷங்கள் இருக்கும். பொசுக்குற விஷயங்களும் இருக்கும். அது சில நேரங்களில் களஞ்சியம். சில நேரங்களில் குப்பைமேடு. குப்பைமேடுகளை அகற்றிக் களஞ்சியத்தைத் தோண்ட வேண்டும். இதுக்குப் பலபேர் தன்னிடம் புதைந்திருக்கிற ஆற்றலைப் புரிந்துகொள்ள முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் இருக்கிற புதையலை நாம்தான் தேடி எடுக்க வேண்டும்.

நம்மால் சூரியனாக பிரகாசிக்க முடியும்போது ஏன் மெழுகுவர்த்தியைப் போன்று வெளிச்சம் தரவேண்டும். நம்மிடம் இருக்கும் ஆற்றலைப் புரிந்து கொள்வதுடன் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும். தடைகள் என்பது எதுவும் இல்லை. "முடியும் என்று நம்புவோருக்கு எதுவும் முடியும்"

"Ships are safer in the harbour - but they are not Meant for that purpose"

கப்பல் துறைமுகத்தில் நின்றால் ஆபத்தில்லாமல் பத்திரமாக இருக்கும். ஆனால் அதற்காகவா கப்பலைச் செய்தார்கள்? சும்மா வாழ்ந்தாலே சுகம் தான். - ஆனால் அதற்காகவா ஆண்டவன் நம்மைப் படைத்தான்! வாழ்ந்தால் மட்டும் போதுமா? வெல்ல வேண்டாமா - ஏதாவது ஒன்றிலாவது! வெற்றி பெற வேண்டாமா?. சந்தர்ப்ப சூழ்நிலைக்கு நாம் எஜமானாக இருக்க வேண்டும். உணர்வுகள் நமக்கு எஜமானனாக இருந்தால் தோல்விதான். விழிப்பதற்கே உறக்கம்! வெல்வதற்கே தோல்வி! எழுவதற்கே வீழ்ச்சி! வாழ்க்கை வெல்வதற்கே.

**தி.சாய்ராமன்**
இளம் வேதியியல் (இடை)





# SRI KAILAS

## Javvadu
## Vasanai Viboothi

***Distributors :***

**SRI NATARAJA TRADERS**
**115, EAST CAR STREET,**
**CHIBAMBARAM - 608 001**

**All Quality Pooja Meterials are available**






# வீரப்பன் கேட்டால்...

சத்தம் இல்லாத "சந்தனம்" கேட்டேன்.
யுத்தம் இல்லாத "தந்தம்" கேட்டேன்.
ரத்தத்தில் என்றென்றும் வேகம் கேட்டேன்.
ரகசியமாய் ஒரு "பேரம்" கேட்டேன்.
உயிரைக் கிள்ளாத "போலீஸ்" கேட்டேன்,
ஒற்றை ஆளாய் "நியாயம்" கேட்டேன்,
கடத்திப் போக "ஆட்கள்" கேட்டேன்.
மீட்டுச் செல்லத் "தூதரைக்" கேட்டேன்.
தமிழனுக்கு என்றும் "பாதுகாப்பு" கேட்டேன்.
போதும் போதுமென "மன்னிப்புக்" கேட்டேன்.
இத்தனைக் கேட்டும் கிடைக்கவில்லை
இதிலே எதுவும் நடக்கவில்லை
நாடே நாடே வேண்டாமென்று
காடே காடே காடே கேட்டேன்...

ஏம். ஃபைஜுர்
இளம் வணிகம்(இடை)



# நம்பிக்கை

சுகர் இருக்கும் என்று நம்பி
ரேஷன் சென்றேன் அங்கு இல்லை...
சுகர் இருக்காது என நினைத்து
டாக்டரிடம் சென்றேன் இருந்தது என் உடலில்.

எம். பரணிதரன்
இளம் பொருளியல்(முதல்)



நமது நிர்வாக இயல் கல்லூரிகள் போதுமான அளவிற்கு மேல்படிப்பு மாணவர்களைத் தயார் செய்கின்றனவா? என்று கேட்டால் ....

"இல்லை" என்றே சொல்லவேண்டும்.

இன்றைய தாராளமயமாக்கப்பட்ட சூழ்நிலையில் நிர்வாக இயலின் பல துறைகளிலும் ஏராளமான வல்லுநர்கள் தேவைப்படுகின்றார்கள். பலவிதமான நிறுவனங்கள் உற்பத்தி நிறுவனங்கள், வங்கிகள், வணிக சேவை நிறுவனங்கள் மற்றுமுள்ள நிறுவனங்களுக்கெல்லாம் ஒரு ஆண்டுக்கு 2,735 வல்லுநர்கள் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால், ....

நமது நாட்டில் பெரிய நிர்வாக இயல் கல்லூரிகளில் ஒரு ஆண்டுக்கு 1,740 மேல்நிலை மாணவர்களையே தயார் செய்கின்றனர். இதன்படி நமது நாட்டிற்கு இன்னும் நிறைய நிர்வாக இயல் வல்லுநர்கள் தேவைப்படுகின்றார்கள்.

இதெல்லாம் சரி. இதில் எப்படி சேருவது?

பொதுவாக எல்லா நிர்வாக இயல் கல்லூரிகளிலும் மாணவர்களை, அவர்களின் ஆர்வம் மற்றும் தகுதி அடிப்படையிலேயே தேர்வு செய்கின்றனர். ஒரு மாணவன் நிர்வாக இயல் கல்லூரிகளில் சேர வேண்டும் என்றால்

கல்வித் தகுதி, நுழைவுத் தேர்வில் மதிப்பெண்கள்,
குழுவிவாதம், நேர்முகத் தேர்வு,
வேலைவாய்ப்பு அனுபவம் (இருப்பின்)



இத்தனையிலும் தன் முத்திரையைப் பதிக்கவேண்டும்.

சொல்றத கொஞ்சம் தெளிவா சொல்லுங்கப்பா —

கல்வித் தகுதி என்பது மாணவனின் முன் கல்வித் தகுதிகளுக்கு ஏற்ப மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

ஓ.ஹோ ... அப்ப நுழைவுத் தேர்வு .....

பேச்சுத் திறமை, படிக்கும் திறமை, கணிதத் திறமை, ஆய்வுத் திறமை, பொதுஅறிவு இது அத்தனையும் நுழைவுத் தேர்வில் கவனிப்பார்கள்.

பொது அறிவா! அது எங்கே விக்கிறாங்க ?

எல்லா கடையிலுமே விக்கிறாங்க, விஷயத்துக்கு வருவோமா ......

குழு விவாதத்தில்.....

பரிச்சயமற்ற உறுப்பினர்கள் உள்ள குழுவில் அணுகுமுறை
தொடர்புத் திறமைகள், ஆக்கபூர்வமான யோசனைகள்,
கருத்தாழம், தலைமைத்தகுதிகள்
இவை அத்தனையும் கவனிப்பார்கள்.

அட, நம்ம நண்பர்களகூட அரட்டையடிப்போமே அதான் குழுவிவாதமா!

ஆமா, இவ்வளவு முடிந்தும் அப்பறம் எதுக்கு நேர்முத் தேர்வு வேற?

(தொடர்ச்சி 75-ம் பக்கம்)

☎ 22816

தேவர் பாத்திரக்கடை

**S.N. குருமூர்த்திசன்**

பித்தளை & எவர்சில்வர்
பாத்திர வியாபாரம்,

பெரியகடைத்தெரு,
மயிலாடுதுறை - 609 001.

வாங்கிப்பழகிய இவ்வுலகில்....
கொடுத்துப் பழகுவோம் -
இழப்பில்லாத இரத்தத்தை.

இதுவரை 500 யூனிட் இரத்தம்
வழங்கி சாதனை படைத்த

**DYFI இரத்ததானக் கிளப்பில்**

இணைவீர்!

14/4, பசுபதி தெரு, மயிலாடுதுறை.
☎ 27575 E-mail : dyfi_myl@usa.net





## கணினி... குறள்...



1. Bench, Project, e-mail இம்மூன்றும்
Programmer வாழ்வில் தலை.
2. எதுசெய்யாராயினும்Compile செய்க
செய்யாக்கால் பின்வரும் syntax Error.
3. பிறன் code நோக்கான் எவனோ
அவனே tech fundu.
4. Logic, syntax இவ்விரண்டும் கண்ணென்பர்
program செய்பவர்.
5. Bug கண்டுபிடித்தாரை ஒறுத்தல் அவர்நாண
debug செய்து விடல்.
6. Copy, paste செய்து வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம் coding எழுதியே சாவார்.
7. எம்மொழி மறந்தார்க்கும் job உண்டாம்
job இல்லை "C"யை மறந்தார்க்கு.

எம். பைசல்,
இளம் மின்னணுவியல் (இடை)



"ஈவ் டீசிங்" புகார்களை தொலைபேசி மூலம் உடன் தெரிவிக்க: 1091. (இதற்கு தொலைபேசி கட்டணம் இல்லை)

## கடற்கரை

இது மீனவர்களின் வங்கி
இதன் கரை காதலர்களின் அறை
சுண்டல் விற்பவனின் கடை

த.சக்தி
இளம் விலங்கியல் (நிறை)

# சுயவேலைவாய்ப்பு

நீங்கள் துடிப்பும், ஆர்வமும் உள்ளவரா? குறைந்த முதலீட்டில் சுய தொழில் செய்து கனிசமான வருமானம் பெற விருப்பம் உள்ளவரா?

கடந்த எட்டு ஆண்டுகளாக உலகில் 12 நாடுகளில் <u>ISO 9002, ISO 14001, GMP, TGA</u> போன்ற பல்வேறு தரசான்றிதழ்களைப் பெற்று பல்லாயிரகணக்கான மக்களின் பாராட்டுதலைப் பெற்ற ஒரு கம்பெனியின் உறுப்பினராகி மிகுந்த வருமானம் பெற அணுகவும்

1. ***V.Balasubramanian***
   *56, South Car Street, Chidambaram.*
   *Ph : 20012*
2. ***R.Rajesh***
   *40/36, Rengavilas, Thirumanjacha Veedhi, Thiruvilandhur Street, Mayiladuthurai.*
   *Ph : 21230*
3. ***M.Bharanidharan***
   *66 'B' Pulugapet Street, Sirkali.*
   *Ph : 72326*

*(Chvana Health Care CDM @ yahoo.com)*





## விரிகடல் தேடி ....

மனிதனை மனிதன் அறிந்து கொள்வதற்கும், கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் மிகப்பெரிய கருவி மொழி. மனிதன் ஒருமொழியை மட்டும் அறிந்து கொண்டிருத்தல் கூடாது. பல மொழிகளை அறிந்தால் தான் அறிவு விசாலமாகும். மனிதன் எத்தனை மொழி அறிந்திருக்கிறானோ அந்த அளவிற்கு அறிவு விசாலமாகி மனிதனாகிறான், அதாவது ஒரு மனிதனுக்கு மூன்று மொழிகள் தெரிந்திருந்தால் அவன் மூன்றுவிதமான மனிதர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைக்கிறது. அப்போது அவன் மூன்று மனிதனாகிறான்.

இந்தியாவின் வடபகுதியில் உள்ள எல்லோருக்கும் கட்டாயம் இந்தி தெரிந்திருக்கும். மேலும், அங்கு ஒருவருக்குக் குறைந்தது மூன்று மொழிகளாவது தெரிந்திருக்கும். ஆனால் நம் மாநிலமான தமிழ்நாட்டில் அப்படியல்ல. நாம் தமிழ்மொழியைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் தான். ஆனால் தமிழ்மொழியோடு பிற மொழிகளையும் கற்க வேண்டும். நாம் பிற மொழிகளைக் கற்றால்தான் தமிழ் மொழியின் இனிமையும் அருமையும் நமக்குப் புரியும்.

எனவே தமிழ் மக்களாகிய நாம் பிற மொழிகளைக் கற்பதோடு, நம் தமிழ் மொழியைப் பிற நாட்டவரும் கற்குமாறு செய்ய வேண்டும்.

இனி ...

நாம் நம் பார்வையின் பரப்பளவை அதிகரிப்போம். கிணற்றுத் தவளையாயும், குளத்து மீனாயுமில்லாமல் விரிகடல் தேட விரைவோம் வாரீர்!

க. ஸ்ரீவித்யா
இளம் மின்னணுவியல்(நிறை)

பெண்களின்
துப்பட்டாவைப்
பறிக்கும்
கலியுக
துச்சாதனன்...



ம. கலைமணி
(முதுநிலை வனவாழ் உயிரியல்(நிறை)

**QQSP: The most Advanced Web-Focussed career program is here.**

**So advanced, we provide International certifications right from Level 1.**

LCC ™

**LAKHOTIA**
**COMPUTER CENTRE**

**Deen Plaza, Mayiladuthurai.**
☎ : 04364-42032

www.lccinfotech.com





# ஆசையோ... ஆசை

சிகரம் எட்ட வேண்டும்,
நம் சிந்தனை உயர வேண்டும்,
சாதனை புரிய வேண்டும்,
நமக்குச் சமயோஜித புத்தியும் வேண்டும்,
வள்ளுவன் வழி நடக்க வேண்டும்,
வாழ்வாங்கு வாழ வேண்டும்,
அறிவியல் தமிழ் வளர வேண்டும்,
அறிவுப்பசி எடுக்க வேண்டும்,
நாடு வளர வேண்டும்,
காடு செழிக்க வேண்டும்,
புதுமைகள் புரிய வேண்டும்,
புத்தகங்கள் பல பயில வேண்டும்,
பசுமை உலகம் வேண்டும்,
அங்கே படிப்பறிவு பெருக வேண்டும் ...

சு.நாராயணன்
இளம் கணிதம் (நிறை)




மகன்: அப்பா ! நான் எல்லா சப்ஜெட்லையும் பாஸாயிட்டேன்.

அப்பா: ரொம்ப சந்தோஷம்டா மகனே!

மகன்: ஏமாந்திங்களா! ஏப்ரல் ஃபூல்

ச.பி.செந்தில்
இளம் வணிகம் (இடை)

*Kind Attention dear Students ...*

THE NEW

**ACCP 2002**

Master today, what the world will learn tomorrow

A little knowledge is always dangerous especially in the Technology arena

**IT IS TIME TO FUTURE - PROOF YOUR CAREER**

# APTECH

**COMPUTER EDUCATION**

I FLOOR, DEEN PLAZA,
MAYILADUTHURAI. ☎: 27606

www.aptech_education.com





## இனியொரு விதி செய்வோம் ...

நான்கு நாட்கள் உலகைத் தன் வசம் திருப்பியதும், ஆக்ராவின் உலக அதிசயம் அதிசயமாய் சுத்தம் செய்யப்பட்டதும் தவிர முஷாரப்பின் வருகை குறித்தப் பதிவுகள் நம்பிக்கையூட்டுவதாய் இல்லை. கடந்த 54 ஆண்டுகளில் அம்மாநில மக்கள் நிம்மதியாய் உறங்கிய நாட்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். உலகு பார்க்கும் முன் தாய் தொலைத்த குழந்தையும், தன் வாழ்வு குறித்தக் கனவுகள் தொலைத்துவிட்ட இளைஞனும், தன் பிறப்புமுதல் வன்முறை இரைச்சலினூடே, தன் இளமை தொலைத்த முதாட்டியும் அம்மாநில வரலாற்றின் கொடூரப் பதிவுகள். இவர்கள் வாழ்வைத் தொலைத்த காரணகர்த்தாக்களால் இவர்கள் இழப்பை ஈடுசெய்ய முடியுமா? என்ன விலை கொடுத்தாயினும் ஓர் அமைதியான கடந்த காலத்தை இவர்களுக்குக் கொடுக்க இயலுமா? இத்தனை இழப்புக்களுக்கும், தியாகங்களுக்கும் ஓர் அர்த்தம் கிடைத்திருக்கும்! அம்மக்களின் வாழ்க்கை முறையில் ஒரு சிறிய முன்னேற்றமாவது ஏற்பட்டிருக்குமாயின்! எனினும் நாளுக்கு நாள் ஒரு மாநிலப் பிரச்சனை மதப்பிரச்சனையாகி விசுவரூபம் எடுக்கிறதேயன்றி, அமைதிக் காற்றின் அறிகுறியே காணோம். அவ்வன்முறை வேர் காடு முழுவதையும் தன் களமாக்க வந்திருப்பதுதான் வேதனை! 1991ம் ஆண்டுக்குப்பின் ஒரு சுதந்திர தினத்தையாவது நாம் சுதந்திரமாய் கொண்டாடியிருப்போமா? தமிழகத்தின் அமைதியும் சகோதரத்துவமும் காஷ்மீரில் ஓர் நல்ல விளைவை ஏற்படுத்த முடியாதபோது, காஷ்மீரத்து வன்முறை தமிழகத்தில் மிகச் சுலபமாய் ஒரு எதிர்மறை விளைவை வெற்றிகரமாய் உண்டாக்க முயல்வது நம் மனிதாபிமானத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரும் தலைக்குனிவு என்பதை ஏன் நாம் உணரவில்லை?


உன் இழப்பு உன் குடும்பத்திற்குத் தரும் வேதனையைத்தானே ஒவ்வொரு உயிரின் இழப்பும் கொடுத்திருக்கும்? உனக்கு சம்பந்தமில்லாத வன்முறைக் களியாட்டத்திற்கு நீ பலியாதல் எத்தனைத் துயரம்?

☎ : 28944

இசைந்து வரும் வீணையில்
இனிய ஒலி நாதமாய்
எங்களின் புதிய காலணி
நிறுவனம்

# பாட்டம் ஷூ மார்ட்

112/123, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை.



குறிப்பு : [ Bata, Action, Liberty, Phonscix, Aristocrat, Diamond, Rex ]

ஆகிய எண்ணற்ற கம்பெனிகளின் காலணிகள்
கிடைக்கும்.





வன்முறையின் விளைவு தரும் வேதனை தெரிந்திருந்தும் புரிந்திருந்தும் நாளுக்கு நாள் அக்கூட்டங்கள் பலம் பெறுதல் எங்ஙனம்? இதுவரை வந்த தலைமுறைகள் போகட்டும். இனி வரும் தலைமுறையேனும் பூக்கட்டும்.

அஹிம்சையின் புனிதமும், அமைதியின் அருமையும் அறிந்து காஷ்மீரிலும், இஸ்ரேலிலும், காபுலிலும் சேவை புரியும். அமைதியாய்(ல்) வன்முறையை வீழ்த்த கைக்கோக்க வா இளைஞனே!

ஞான. வித்யா
முதுநிலை கணினி (நிறை)

# சுதந்திர தினம்

குழந்தைகளுக்கு மகிழ்ச்சி
சுதந்திர தினத்தன்று இனிப்பு தருவார்கள் என்று!
அலுவலர்களுக்கு ஆனந்தம்
சுதந்தர தினத்தன்று அலுவலகம் விடுமுறை என்று!
பெண்களுக்குக் குதூகலம்
சுதந்திர தினத்தன்று சிறப்பு நிகழ்ச்சி என்று!
குடிகாரனுக்கோ எரிச்சல்
சுதந்திர தினத்தன்று கடை விடுமுறை என்று!
தலைவர்களுக்குப் பெருமை
சுதந்திர தினத்தன்று கொடியேற்றப் போகிறோம் என்று!
நாம் கொண்டாடுகிறோம்
சுதந்திர தினத்தை மகிழ்ச்சியாக, ஆனந்தமாக,
குதூகலமாக, பெருமையாக, ஆனால்
இரு கண்கள் மட்டும் கண்ணீர்
சிந்துகின்றன அது ஆனந்தக் கண்ணீரல்ல
வேதனைக் கண்ணீர் அந்த கண்கள் ஒரு தியாகியின் கண்கள்
அவை வேதனைபடுவது நாம் கொண்டாடும்
சுதந்திரத்தைப் பார்த்து அல்ல
சுதந்திரம் என்பதன் அர்த்தம் புரியாமல்
நாம் கொண்டாடுகிறோம் என்ற பெயரில்
திண்டாடும் சுதந்திரத்தைப் பார்த்து.

தெ. சியாமளா,
இளம் மின்னணுவியல்(இடை)

# இனி வரும் காலம் யார் கையில்?

என்ற கோடீஸ்வர கேள்விக்கு அது கணினி கல்வி கற்றவருக்கே என்று முத்திரையைப் பயன்படுத்தாமல் சட்டென்று க்ளிக் செய்து பதில் சொல்லலாம். கணினி கல்வி என்பது நமது சமூகத்திலுள்ள அனைத்து தளங்களிலும் வியாபித்திருக்கும் மக்களுக்குத் தரப்பட்டுவிட்டதா? இல்லை தானே! இன்னமும் கிராமபுற இளைஞர்களுக்கும்-நகரத்தில் பெரும்பான்மையினருக்கும்-கம்ப்யூட்டர் கல்வி ஒரு கனவு மத்தாப்பூவாகத் தானே தோன்றுகிறது.

மூடிய கண்ணாடிக் கதவுக்குள் ஓசையின்றி - மெல்லிய வெளிச்சத்தில் நுனிநாக்கு ஆங்கிலத்தில் கற்றுத் தரப்படும் கணினி கல்வியின் விலை சற்று அதிகம் என்பது தானே?

இந்தத் தடையை சுக்குநூறாக உடைத்து அனைவருக்கும் கணினி கல்வியைச் சென்று சேர்க்க வேண்டும் என்ற உன்னத லட்சியத்தின் - மயிலாடுதுறை முனிசிபல் ஹைஸ்கூல் எதிரில், கமால்மேன்சன் இரண்டாம் மாடியில் **C INFOTECH** கம்ப்யூட்டர் பயிலகத்தில் துவங்கப்பட்டதுதான் **(TCPS)** எனும் தமிழ்நாடு கம்ப்யூட்டர் கல்வி மேம்பாட்டுத் திட்டம். இது **(NLPC)** என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அமைப்பாகும்.

இங்கு அடிப்படை கல்வி முதல் இகாமர்ஸ் வரை நடத்தப்படுகின்றன. அத்தனையும் கட்டணமின்றி இலவசமாகக் கற்றுத்தரப்படுவது தான் நம்மை அதிர்ச்சியில் உறைய வைக்கும் உண்மை செய்தி. இப்பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு ***விண்ணப்பக் கட்டணம் இல்லை, கோர்ஸ் பீஸ் இல்லை, சான்றிதழ் கட்டணம் இல்லை.** இப்படி பல இல்லைகள். ஆனால் கற்றுத்தரும் கல்வியின் தரமோ மயிலாடுதுறையின் சக நிறுவனங்களுக்குச் சற்றும் குறையவில்லை என்பது நிஜத்திலும் நிஜம். இச்சான்றிதழ்கள் அரசாங்கத்தின் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவு பெறும் மதிப்பு வாய்ந்தவை என்பது ஒரு எக்ஸ்ட்ரா வியப்பு.

வருடம் 2 தேர்வுகள் - மாநிலத் தேர்வுகள் கூட்டுக் குடும்பம் போல் தோற்றமளிக்கும். பயிற்சி அளிக்கும் தமிழக அளவில் 148 நிறுவனங்கள்- நண்பர்களாக 13,100 மாணவர்கள். இனக்கமான பணிகள், சிறந்த பயிற்சியாளர்கள்.

நீங்கள் மேற்கண்ட வார்த்தைகளின் உண்மைகளைக் கண்டறிய எங்களிடம் ஒரு முறை வாருங்கள்.

## C INFOTECH

140 Pattamangala Street, Opp : Municipal High School,
IInd floor, Kamal Mansion, Mayiladuthurai. ☎ : 42066

Course offered : PGDCA, HDCA, DIT, DOA, COA, DDTP

We think better





# நம்ம ஊரு காவிரி ...

"மயிலாடுதுறை பகுதி வந்துதான் காவிரி ஆறு ரொம்ப மோசமா இருக்கு" இப்படிப் பல குரல்கள்.

இதைப் பற்றி விசாரித்ததில் நகரத்தின் கழிவு நீர் முழுவதும் ஆற்றில் கலப்பது தான் இதற்குக் காரணம் என்றார்கள். இதைப் பற்றி முழுமையாகத் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் பழைய கோப்புகளைக் கிளறியதில், மூத்தகுடிமக்கள் அவையினர் உச்ச நீதி மன்றத்தில் கழிவு நீர் கலப்பதை எதிர்த்து வழக்குப் பதிவு செய்திருந்தது. தெரியவந்தது. அதைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள அவர்களை அணுகியபோது, உயர் நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பான GREEEN BENCH ORDER பற்றிக் கேட்டறிந்தோம். அத்தீர்ப்பில் காவிரி ஆற்றில் கழிவுகள் கலக்கக் கூடாதென்றும், மேலும் கழிவு நீரினை சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தூய நீரினையே ஆற்றில் கலக்கவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதற்காக அரசு சில லட்சங்களையும் ஒதுக்கியதாகவும், அவை சரியான முறையில் நகராட்சியால் பயன் படுத்தப்படாமல் அத்தொகை சாலை மேம்பாட்டிற்கென திருப்பிவிடப்பட்டதாகவும் தெரியவந்தது. இவற்றிற்கான காரணங்களை அறியும் பொருட்டுக், கேள்விகளுடன் நகராட்சி ஆணையரைச் சந்தித்தோம்.

காவிரி ஆறு மயிலாடுதுறை வந்து தான் மாசுபடுகிறது என்கிறார்களே... என்ற நம் கேள்விக்கு, மயிலாடுதுறை வந்துதான் மாசுபடுகிறது என்று முழுமையாகச் சொல்லி விட முடியாது. இருப்பினும் ஒரளவிற்கு உண்மை. திருச்சியிலிருந்துஅணைக்கரை வரை அகலமாக வரும் காவிரி நம் எல்லைப் பகுதியிலிருந்து தான் குறுகலாகிறது. அதனால்தான் மாசு அதிகமாகத் தெரிகிறது.

உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டு (Green bench order), சில லட்சங்கள் ஒதுக்கப்பட்டும் அத்திட்டம் கைவிடப்பட்டதேன் என்ற போது, இந்தத் திட்டத்தின் மூலம் சில குறிப்பிட்ட பகுதிகள் மட்டுமே பயன் அடைவதாலும், இதற்காகத் தொகை அதிகம் செலவாகும் என்பதாலும் இத்திட்டம் கைவிடப்பட்டு,

மயிலாடுதுறை மாநகரில்
நவீன காலணி ஷோரூம் ...

மியாமிகுஷன், பாரகான், பிரிமியர், பாட்டா ஹவாய் செருப்புகள், ஸாண்டக் மற்றும் பேன்ஸி செருப்புகள், ஸ்கூல் ஷு, சாக்ஸ் தரமாகவும், விலை மலிவாகவும் கிடைக்கும்.

# மிலன் ஷு மார்ட்

127, காந்திஜி ரோடு,
நரசுஸ் காபி அருகில்,
மயிலாடுதுறை.



RS. 75/- முதல்
பேன்ஸி செப்பல்கள்
கிடைக்கும்



அப்பணம் சாலை மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டது. இதிலும் சுமார் 42 கோடி ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் அமலுக்கு வந்தது. பெரும்பாலும் இதுபோன்ற திட்டங்கள் 1 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கும் இடத்திற்கும் அதிகமான சுற்று வட்டாரம் உள்ள இடத்திற்கு மட்டுமே வழங்கப்படும். ஆனால் இதற்கு மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டுமென்பதற்காகக் குறைந்தபட்ச தொகையாக 2 கோடி மக்களிடம் வசூலிக்கப்படும். காவிரியில் கழிவு நீர் மட்டுமில்லாமல், பாலித்தீன் பைகளும் காணப்படுகின்றன. குறிப்பாகப் பழங்காவிரியில் அதிகமாகக் காணப்படுகிறதே என்று நாம் கேட்டதற்கு 30.6.2001 க்கு மேல் பாலித்தீன் பொருட்களின் உபயோகமும் விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பாலித்தீன் குப்பைகளை இயன்ற வரையில் தவிர்க்க முடியும்.

பேருந்து நிலையம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்து வரும் கழிவுகளே அதிகமாக ஆற்றில் கலக்கப்படுவதாய் ஒரு குற்றச்சாட்டு நிலவுகிறதே. என்றதுக்குப் பேருந்து நிலையத்தையே இடம் மாற்றும் யோசனை உள்ளது. இதன்மூலம் சில சிக்கல்கள் முடிவுக்கு வரலாம் என்றார்.

மாணவர்களாகிய நாம் நினைத்தால் கண்டிப்பாக அதைத் தவிர்க்க முடியும். அதற்காக நாம் வீடுவீடாகச் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டியதில்லை. நம் வீட்டையும், நமக்குத் தெரிந்தவர்களையும் நம்மால் இயன்ற வரை சரியாக இருக்கச் செய்தாலே போதுமானது. இப்பிரச்சனையில் நம் போன்ற இளைஞர்களின் பங்களிப்பு சற்று அதிகமாகத்தான் வேண்டியிருக்கிறது. அதிகம் வேண்டாம். நம் கல்லூரி வளாகத்தையே நம்மால் இயன்றவரை தூய்மையாக வைத்துக் கொள்ளலாமே! நம் சுற்றுப்புறம் தூய்மையாய் இருந்தால் நம் மனமும் தூய்மையாக இருக்கும் என்று எங்கேயோ படித்த ஞாபகம் வந்திருக்க வேண்டுமே ...

# TCDS

COMPUTER EDUCATION

Regd.No.24/2000

ALL OVER TAMIL NADU

**MASS** COMPUTER EDUCATION

34, Cutchery Road,
Mayiladuthurai - 609 001

☎ : 41516






பக்கம் 59-இன் தெடர்ச்சி....

மாணவர்களின் நிறை, குறைகளை நேர்முகமாக அறிந்து, முன்குறிப்பிட்ட மற்றத் தகுதிகளையும் உள்ளடக்கி மாணவர்களின் சேர்க்கை நிர்ணயிக்கப்படுகிறது.

இந்தியாவில் முன்னணியில் உள்ள இருபது கல்லூரிகளில் திருச்சியிலுள்ள BHARATHIDASAN INSTITUTE OF MANAGEMENT-ம் அடங்கும்

சரி, நான் அயல்நாட்டில் படிக்கணும்னா .....

அயல்நாட்டிலுள்ள நிர்வாகஇயல் கல்லூரிகளில் படிக்க விரும்புபவர்களுக்கு இந்த வெப்தளங்கள் உதவும்.

www.wharton.upenn.edu
www.kellog.nwr.edu
www.gsb.uchicago.edu
www.bus.umich.edu
www.hbs.edu
www.fuqua.duke.edu
www.gsm.cornell.edu
gsb.www.stanford.edu
www.dartmouth.edu/tuck
www.darden.virginia.edu
www.anderson.uka.edu
www.stern.nyu.edu/external.html
www.columbia.edu/cv/business/default.html

நிர்வாக இயல்களில் சேர்ந்து படித்தால் உங்கள் திறமைக்கேற்ப ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது. என்பதை மறந்து விடாதீர்கள்.

ஜெ.ரகுநாத்
இளம் வணிகம் (இடை)

## கவிதை

க-வில் தோன்றி
தை-யில் முடிந்து
we-யை மகிழ்விப்பது



இரா.பத்மாவதி
இளம் மின்னணுவியல் (இடை)

தரமான திருபுவனம் பட்டுச்
சேலைகளுக்கு . .

# K.S. A/C

# பட்டு சென்டர்

(அரசு பதிவுபெற்றது)

24/8A, ஜவுளி செட்டித்தெரு,
பூக்கடைத் தெரு, (உள்புறம்)
மயிலாடுதுறை - 2.

☞ சொந்தத் தறியில் உற்பத்தி
☞ 60 ஆண்டுகால அனுபவம்
☞ ஆர்டரின் பெயரில் தயாரிப்பு

☎ : 23012 Cell : 98424 23012






## “சாகடிக்காமல் பார்த்துக் கொள்வோம்!”

“இளைஞர்கள் நாங்கள் இருபதுகோடி! இந்திய நாட்டின் இருதய நாடி! என்றார் உணர்ச்சிக் கவிஞர் ஜீவானந்தம். இந்த இருதய நாடிகள் தான் இன்று இதய துடிப்புகளைத் துண்டித்துக் கொண்டிருக்கின்றன. ஆம்! நம்முடைய பலவீனத்தைப் பலனுள்ளதாக மாற்றிக்கொண்டிருக்கிறது பல பகல் கொள்ளைக் கூட்டங்கள்.

இவர்களுடைய ரசனை இப்படியிருக்கிறது! அதனால்தான் நாங்கள் ரசனைக்கேற்றதைத் தருகிறோம்! என்கிறது வெளிச்சத்திலிருந்து கொண்டு, நம்மை இருட்டுக்கு இழுக்கும் திரைக் கொள்ளைக் கூட்டம்.

வாழ்க்கையே தறிகெட்டுப் போக, கிரிக்கெட்டால் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது, ஒரு வெளிநாட்டுக் கூட்டம். தம்பா! மக்கள் உழைப்பில் உண்டுகளித்த பிரபுக்கள் ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்தால் தங்கள் உடலுக்கு ஒவ்வாது என்பதால் கை, கால்களை அசைத்துக் கொள்வதற்காக ஆரம்பித்த ஆட்டம்தானாம் கிரிக்கெட்.

இன்று நாம் சாப்பிடும் போதும், சாலையில் நடக்கும் போதும் பந்துவீசக் கற்றுக் கொடுத்திருக்கிறது நமக்கு.

நான் கிரிக்கெட்டுக்கு எதிரியல்ல ...! ஆனால் ... இதனால் நம்மை அடிமைப் போதையில் தள்ள, வெறும் ஒரு ரூபாய் இருபது காசு மூலப்பொருட்களால் தயாரிக்கப்படுகின்ற 250 மில்லி கார்போ சைக்ளின் ஆசிட்டை (பானத்தை) இன்று நம்மிடையே எவ்வளவு ரூபாய்க்கு விற்கிறார்கள்? என்பதை நாம் நன்கு தெரிந்து தானே இருககறோம்!

நமக்கு அதைக் குடித்தால் தானே என்சாய் பண்ண முடிகிறது ..? நாம் கொடுக்கிற 250 மில்லி பான விலையில் இவர்கள் நான்கு ரூபாய் விளம்பரத்திற்காகச் செலவிடுகிறார்களாம்..!

அதே விலையில் உள்ள நம்மூர் பானங்களைக் குடித்தால் அதைக் கௌரவப் பிரச்சனையாக அல்லவா நாம் நினைத்து விடுகிறோம்..!

இளைய தலைமுறையின் எழுச்சி மிகு இலக்கியமே, இந்த உலகின் எதிர்கால இணையற்ற செல்வமே,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு." என்னும் குறளுக்கேற்ப விடாமுயற்சியுடன் ஒருமுகமாக எந்தச் செயலைச் செய்தாலும் எதிர்கால சிற்பியாகிய இந்த எட்டினையும் நீ உன் தாரக மந்திரமாய்க் கொண்டால் வாழ்க்கையில் எந்த இடத்திலும் எந்தத் தடை ஏற்பட்டாலும் அதனை வெற்றிக் கொள்ள இளைஞனே உன்னால் முடியும்.

இளைஞனே, இந்த நூற்றாண்டு காத்துக் கொண்டிருக்கிறது. 'நம்மால் முடியும்'

உன்னால் முடியும் தம்பி

உலகை மாற்றும் எழுச்சி நீ கொள்.
உயரிய கலைகளை ஊன்றி நீ கல்
உயர்வினைத்தடுக்கும் தடைகளை வெல்.
உற்ற சோம்பலை உடன் நீ கொல்.

உதவாப் பொழுதுபோக்கை உதறி நீ தள்.
உணர்ச்சி வேகம் உனை வீழ்த்தும் முள்.
உடனுக்குடனே வினை முடித்து நில்.
உன்னத அழகுடன் எதனையும் சொல்.

இளைஞனே எல்லாவற்றிலும் உன்னால் வெற்றி கொள்ள முடியும். இளைஞனே இன்றே இப்பொழுதே எதிர்கால இந்தியாவைச் சிறந்த நாடாக மாற்றுவதற்கு உன்னளவில் சில முயற்சிகளைச் செய்ய உறுதி எடுத்துக்கொள். கீழ்க்கண்ட எட்டு விலை உயர்ந்த நகைகளை நீ அணிந்துகொள்; என்ற எழுச்சி உன் இதயத்தில் ஊற்றெடுத்தால் நீ ஒரு 'கலிலியோ ஆகலாம்', 'நியூட்டன் ஆகலாம்' வள்ளுவர், தாகூர் போல் உருவாகலாம். எல்லாவற்றையும் திட்டமிட்டு நீ அமைத்து கொண்டால் உன்னால் இமயத்தையே பந்தாட முடியும், கதிரவனோடு கைக்குலுக்க முடியும்.



'அட மண்ணில் தெரியுது வானம், அது நம் வசப்படலாகாதா' என்ற பாரதியின் எழுச்சி அவரை உலக மகாகவி ஆக்கியது. 'முடியாது என்ற சொல் என் அகராதியில் கிடையாது' என்ற நெப்போலியன் வரலாற்றுச் சாதனை படைத்தான். உலகை மாற்றுவதற்கு முன் உன்னளவில் சிறந்து விளங்க 'இளமையில் கல்' என்பதற்கேற்பவும் 'கடிதாய் இருக்குமிப்போது - கல்வி கற்றிடக் கற்றிடத் தெரியும் அப்போது'

என்னும் பாரதிதாசனின் சொற்களுக்கேற்பவும், உன் எதிர்காலக் கனவுகளைச் செயல்படுத்த, மெய்ப்படுத்த இன்றே தகுந்த துறையைத் தேர்ந்தெடுத்துக் கல்வியில் முதன்மை பெற வேண்டும்.

முதலில் உன் பெற்றோர்க்கு நன்மகனாக இரு.பின்பு சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் நல்ல குடிமகனாக விளங்குக.'எறும்பல்ல நீயே தான், இடி முழக்க ஊற்றுஎழுந்து நின்றால் வான் பணியும் உன்னிடத்துத் தோற்று'என்ற கவிதை வரிகளுக்கேற்பவும் நீ உறுதியாக நின்றாயானால் உனக்கே வெற்றி. எத்தருணத்திலும் நம்மால் முடியும் என்பதை உணர்ந்து துணிந்து நில்.

இளைஞனே துணிந்து நில்! வெற்றிக் கொள்! இன்றைய சமுகமும் நாடும் உனக்காகக் காத்திருக்கிறது.

க. அமுதா
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

## சிறகுகள்



பறவைக்குக்
கிடைத்த பாதுகாப்புச் சட்டம்
தனக்குச் சிறகுகள் இருப்பது-இது
தெரிந்தும் பறக்க நினைக்காத
பறவைகள் தொலைத்தது
சிறகுகளை மட்டுமல்ல
வானத்தையும் கூட...

தி.சாய்ராமன்
இளம் வேதியல் (இடை)




இளந்தூது குழுவிற்கு,

வணக்கம். சென்ற மார்ச் இதழில் வெளியான எல்லாமே சூப்பர்! ஆன்மிகம் முதல் அதிர்ச்சியூட்டும் ரிப்போர்ட் வரை எல்லாமே பயனுடையவை.

சென்ற செப்டம்பர் இதழில் வெளியான "என்ன படிக்கலாம்" -இன் தொடர்ச்சியை மார்ச் இதழில் எதிர்ப்பார்த்தோம். கல்லூரியில் சேர்பவருக்கு வாய்ப்பாய் அமைந்திருக்கும். ஆனால், என்ன படிக்கலாம் தொடர் வெளிவரவில்லை. ஏமாற்றமாக இருந்தது.

இப்படிக்கு,
எஸ்.தீபா
இளம் வணிகம் (இடை)

தங்களின் விமர்சனத்திற்கு நன்றி. சில தவிர்க்கமுடியாத காரணங்களால் "என்ன படிக்கலாம்" - இன் தொடர்ச்சியைச் சென்ற மார்ச் இதழில் வெளியிட இயலவில்லை. உங்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க இவ்விதழில் அதன் தொடர்ச்சியை வெளியிட்டுள்ளோம். - ஆசிரியர்குழு

## பட்டப்படிப்பு / பட்டிக்காடு



பட்டப்படிப்பு
பற்றில்லாமல் படித்து!
பட்டிக்காட்டில்
பதிவாளர் பணிக்குப்
பத்தாயிரம்
பற்றுச்சீட்டின்றிப் பற்றி!
பற்றிய பணி
பணமில்லாப்
பற்றோடு படித்தவனுக்குப்
பயனற்றுப் போனதம்மா!

ஆர்.விஜயலெட்சுமி
இளம் இயற்பியல் (நிறை)





**Tend your face towards Victory in this First TEENth (13) year entry ......**
**Best wishes to Ilanthoodhu**

**BIS**
**COMPUTER EDUCATION**

AN IDEAL CENTRE FOR YOUR BRIGHT CARRIER

## Courses Offered

**DCA (3 Months)**
Computer Fundamentals
MS DOS
Windows 98
MS-Office 2000
Visual Foxpro
Multimedia
HTML

**DCST (3 Months)**
visual Basic 6.0
Oracle 8.0

**SHORT TERM (3 Months)**
Visual Basic 6.0
C and C++
Autocad 2000

Software Service & Installation (2 Months)

**HDSA (6 Months)**
Computer Fundamentals
MS DOS Windows 98
MS OFfice 2000 visual Basic 6.0
Oracle 8.0 Multimedia
HTML

**NOMINAL EXAMINATION FEES ONLY**
**BROLLCOM INFO SOLUTION (P) LTD.,**
**130, MAHADHANA STREET, MAYILADUTHURAI.**
**NAGAI - DT. 609 001. ☎ : 27475**

## தோல்விகளைக் கண்டு துவளாதே

21 வயதில் தொழிலில் தோல்வி அடைந்தார்
22 வயதில் சட்டப்பேரவைத் தேர்தலில்வெற்றிவாய்ப்பை இழந்தார்.
24 வயதில் வணிகத்தில் நஷ்டமடைந்தார்
26 வயதில் தனது காதலியை இழந்தார்
27 வயதில் நரம்பு தளர்ச்சியால் பாதிக்கப்பட்டார்
34 வயதில் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றார்
45 வயதில் மீண்டும் தேசிய அரசியலில் முறியடிக்கப்பட்டார்
47 வயதில் துணை அதிபர் தேர்தலில் தோற்றார்
49 வயதில் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றார்
52 வயதில் அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

அவர்தான் "ஆபிரகாம் லிங்கன்"
தோல்விகளைக் கண்டு அவர் துவண்டிருந்தால், அமெரிக்க வரலாறு ஒரு லட்சியவாதியை இழந்திருக்கும்! அதிர்ஷ்டம் என்று ஏதுமில்லை, காலத்தின் பிடியில் நான் என்று நினைப்பதைவிட நமது கைகள் நம்மிடம் என்று உணருங்கள்

எம்.ரியா சுதீன்
இளம் வணிகமேலாண்மை
(இடை)

---

தமிழ்நாட்டில் உள்ள எந்தக் கல்லூரியில் மைக்ரோசாப்ட் நிறுவனம் ஆய்வு மையம் அமைத்துள்ளது?

PSG Tech, Coimbatore.

இந்தியாவில் உள்ள எந்த ஒரே ஒரு நகரத்தில் மைக்ரோசாஃப்ட் தன்னுடைய கிளையை நிறுவியுள்ளது?

ஹைதராபாத்

கோபிகிருஷ்ணன்
இளம் கணினி (நிறை)





For

Quality

Computer Education



abacus

COMPUTER PARK

27-B, Town Extension,
Mayiladuthurai - 609 001.
☎ : 26203

Our Specialization spells the Success

☎ 24913

மயிலாடுதுறை நகரில்
ஓர் உயர்தர சைவ உணவகம்

"ஹோட்டல் ஸ்ரீ சரவணபவன்"

கச்சேரி ரோடு,
மயிலாடுதுறை



A HIGH CLASS VEGETARIAN HOTEL IN
MAYILADUTHURAI

HOTEL
SHREE SARAVANA BHAVAN

Cutchery Road,
Mayiladuthrai.



## உடலநலம்



மருத்துவர் திகைக்கிறார்
ஸ்டெதஸ்கோப்பில்
சத்தம் இல்லையாம்
பாவம்! இதயம்
தொலைந்த விஷயம்
அவருக்குத் தெரியாது

எப்.ஹபின்ரஹ்மான்
இளம் வணிகமேலாண்மை (நிறை)

## அன்றும் ...

நாட்டை வெள்ளையன்
கொள்ளையடித்தான்
ஓட்டினோம் ...
நம்மவர்கள்
கொள்ளையடிக்கிறார்கள்
ஒட்டளிக்கிறோம் ...

... இன்றும்

எஸ்.சர்மிளா
இளம் வணிகம் (நிறை)

## வேண்டும் வேண்டும் . . .

நூறுவயது வரை உழைக்கும்
தைரியம் மனத்தில் வேண்டும்
நாளைக்கே ராக
மனமும் வேண்டும்



எஸ். சசிரேகா
முதுநிலை ஆங்கிலம் (முதல்)

# பூகம்பம்



குற்றங்கள் களையப்படவில்லை
குற்றவாளிகள்
விசாரிக்கப்படவில்லை
சாட்சிகள் கொண்டுவரப்படவில்லை
அதற்குள் காலதேவன்
இவர்களுக்கு மரணதண்டனை
விதித்து விட்டான்!

# மறக்க முடியுமா?

நகைச்சுவை திங்களில்
அவளைக்கண்டு
காதல் செவ்வாயில்
இருவரும் நட்பு கொண்டு
காவிய புதனில்
மகிழ்ந்து பேசி
அதிரடி வியாழனில்
சண்டை போட்டு
சூப்பர்ஹிட் வெள்ளியில்
இணைந்த அந்த நாட்கள்
மறக்க முடியுமா?

த.புவனேஸ்வரி
இளம் வேதியல் (நிறை)





# வரத்தின் தவம்



அரைஞான் கயிறு இல்லாவிடில்
அதுவும் நின்றிருக்காது
அவன் கால்சட்டை!

அது ஆடை காணாத நெஞ்சு
அப்பட்டமாய் உணர்த்தியது
கரும்புள்ளியாய் சுருங்கிவிட்ட மார்பு!

யார் மூட்டிய நெருப்பு இவன்?
சாம்பல் பூத்திருக்கும் உடல்...

தான் இழந்த வாழ்க்கையைத்
தன் சிசுவின் மூலம்
தாள்களில் தேடிப் பார்க்கும்
முன்னறி தெய்வங்களின்
மூத்த மகனாயிருப்பானோ?

பச்சையம் இழந்தால் தாவரம் வாடும்,
பசித்திருந்தால் பச்சை நரம்புமா மாறும்?

சிலேட்டோடு சீறுடைகள்
சிறகடிக்கும் தருணத்தில்
விழிகளில் முளைவிடும்
விடையறியா ஏக்கப் பயிரை
முளையிலே கிள்ளிவிட்டுச்
சுற்றுப்புறம் சுத்தப்படுத்தும்
சிம்மாசனம் உதறிய சித்தார்த்தன்!

சிதறி விழும் தேங்காய்த் துண்டில்
சுபதினம் உணர்ந்து
மீதி சுமந்த எச்சில் இலைகளில்
முகூர்த்த நாள் அறியும்
மூத்த விஞ்ஞானி!

இலட்சியங்களுக்காய்ப் பசித்திருக்கும் பலரில்
பசித்திருத்தலை இலட்சியமாகக் கொண்டவன்!

இவன்
யாரின் தவத்தில் கிடைத்த
வரம்?
என்று தணியும் இந்த
வரத்தின் தவம்?

தி. காமாட்சி
முதுநிலை வேதியல் (நிறை)

# தனக்கு மட்டும் ....?

ஏன் ..? என் கடிதத்தை வாங்க மறுத்தாள் ...? வாங்க மறுத்தது கூடப் பரவாயில்லை ...! இது எங்க வீட்டுக்குத் தெரிஞ்சாப் பெரிய பிரச்சனையாகிவிடும் .. என்றாளே? அப்படியென்ன காதல் அவ்வளவு பெரிய குற்றமா ... ? இல்ல தேச விரோதச் செயலா ...? குறிப்பா என் அண்ணனுக்குத் தெரிஞ்சா என்னை வெட்டிப் போட்டுவான்னு சொன்னாளே! அவளைக் கொலை செய்யும் அளவுக்குக் காதல் கொடுமையானதா ... ?

ஒரு மனிதனுக்குத் தனக்கு இணையான சோடியைத் தேர்ந்தெடுக்கக் கூட இந்த உலகம் அனுமதிப்பதில்லையே ...!என்ற சிந்தனையில் மூழ்கிருந்தவனைத் தட்டி எழுப்பினான் அவனது நன்பன் சீனு.

டேய் மாப்ள, உன் தங்கச்சிக்கு எவனோ ஒருத்தன் லவ் லெட்டர் கொடுத்து இருக்கான்டா!" என்றவனை எரித்துவிடுவது போல் பார்த்துவிட்டுத் தன் கூரையில் சொருகியிருந்த அரிவாளை உருவி "யாருடா என் தங்கச்சிக்கு லவ் லட்டர் கொடுத்தவன்...?" என ஆவேசமாய் பாய்ந்தான்.

(முற்றும்)

க.சசிகுமார்

முதுநிலை வணிகவியல் (நிறை)

### துணுக்... துணுக்...

தெருக்களில் நாய்கள் செல்லத் தடை விதித்துள்ள நாடு சீனா.

எஸ்.பி.செந்தில்

இளம் வணிகம் (இடை)

## பதினாறு பேறுகள் (செல்வங்கள்)

| | | | |
|---|---|---|---|
| 1. புகழ் | 2. கல்வி | 3. ஆற்றல் | 4. வெற்றி |
| 5. நன்மக்கள் | 6. பொன் | 7. நெல் | 8. அறிவு |
| 9. பெருமை | 10. ஆயுள் | 11. நல்லூழ் | 12. துணிவு |
| 13. பொருள் | 14. இளமை | 15. நுகர்ச்சி | 16. நோயின்மை |

தி.சித்ராஜன்

இளம் கணினி (முதல்)






ஸ்ரீம் ☎ 41127

SHREEM READYMADE

"The New Generation Shop"

43/1, Mahadhana Street,
Mayiladuthurai - 609 001

Authorised Dealer for

"Live in" Jeans

LIVE - IN JEANS

- T.Shirts
- Shirts
- Pants
- Jeans
- Cargos
- Chinos
- Khakis
- Night-Pants
- Bermudas
- Caps
- Belts & Wallets
- Perfumes
- Keychains
- Goggles

**நம் கல்லூரி 2001-2002 கல்வியாண்டில் புதிதாய்ப் பொறுப்பேற்றுள்ள மாணவர்பேரவைத் தலைமைகளுக்கு இளந்தூதுவின் வாழ்த்துக்கள்.**

## மாணவர்.பேரவை

**பொதுச் செயலர்** : என். செல்வமுத்துக்குமார்
III இளம் பொருள்

**துணைச் செயலர்** : சி. குணசேகரன்
II முதுநிலை கணினி

**செயலர்(தமிழ் மன்றம்)** :பி விசேஷபாலன்
II இளம் தாவரம்

**செயலர்(அறிவியல் மன்றம்)** :கே.சசிகுமார்
II முதுநிலை வனவாழ் உயிரியல்

**துணைச் செயலர்** : எஸ்.சுரேஷ்
III இளம் வேதியல்

**செயலர்(வரலாறு)** : டி. ஜெயப்பிரகாஷ்
III இளம் வரலாறு

**செயலர்(பொருள்)** : டி. கார்த்திக்
III இளம் பொருள்

**செயலர்(வணிகம்)** : ஆர். விஜயக்குமார்
III இளம் வணிகம்

**செயலர்(ஆங்கிலம்)** : பி. முகமது அலி
III இளம் ஆங்கிலம்

**செயலர்(நுண்கலை மன்றம்)** : ஜெ. வினோத்
III இளம் இயற்பியல்

**செயலர்(விளையாட்டுத்துறை)** : பி. மார்கண்டேயன்
III இளம் இயற்பியல்





## சிந்திக்க

### சில நிமிடங்கள்

- விடை எழுதுங்கள்
பரிசை வெல்லுங்கள்...

1. When is Kargil day observed?
2. Who is the king of Nepal?
3. For which work was Akilan awarded the Gnanpieth Award?
4. In Which year was Rabindranath Tagore awarded the Nobel Prize?
5. Which country is known as the land of Thundarbolt?
6. When was the first world cup in cricket held?
7. When was the Oxford Dictionary published first?
8. When was Asoka Chakra adopted as our National Emblem?
9. When is world moles Day observed?
10. What is Black Friday?

ஆசிரியர் குழு

பரிசுக் கூப்பன்

பெயர் ____________

____________

வகுப்பு ____________

பதிவு எண் ____________

**விடைகள்**

1. ____________
2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________
7. ____________
8. ____________
9. ____________
10. ____________

நிரப்புக

## விதிமுறைகள் :

இந்தப் பத்துக் கேள்விகளுக்கு விடை எழுதிக் கூப்பனைப் பூர்த்தி செய்து ஆங்கிலத்துறை பேராசிரியர் **திரு எஸ். ஞானஸ்கந்தன்** அவர்களிடமோ அல்லது இளந்தூதுப் பெட்டியிலோ சேர்க்கவும்.

☞ ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் மூவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கப்படும்.

☞ பத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் இல்லையெனினும் அதிகக் கேள்விகளுக்குச் சரியான விடையளி அளிப்பவர்களுக்கு வாய்ப்புத் தரப்படும்.

☞ ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.

## இது என்ன?



இந்தப் படத்தில் உள்ளது என்ன? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உங்களுக்குத் தெரிந்தது தான் கண்டுபிடிச்சிட்டீங்களா இல்லையா .....







## வறுமை

வறுமையில் வாடும் குழந்தைகள், இரவில்
சாலை ஓரத்தில் படுத்து அண்ணாந்து பார்த்தன
நிலவைக் காணவில்லை-கேட்டன
'ஏன்? வானுக்கும் வறுமையா?'
அன்று அமாவாசை

ம.இராஜராஜசோழன்
இளம் தாவரவியல் (முதல்)



## விடுதலை

விடுகதை வாழ்வானது
தனிமை சொர்க்கமானது
வைபவம் தொலைவானது
மறுவாழ்வு வினாவானது

க.ஜெயகுமார்
இளம் இயற்பியல் (நிறை)

## கண்டு கொண்டேன்



காற்றிடம் அறிந்தேன் சுவாசத்தை
மலரிடம் அறிந்தேன் வாசத்தை
ஆசிரியரிடம் அறிந்தேன் ஒழுக்கத்தை
நிலவிடம் அறிந்தேன் வெளிச்சத்தை
நண்பனிடம் அறிந்தேன் நேசத்தை
பெற்றோரிடம் அறிந்தேன் பாசத்தை

ம.சிவக்குமார்
இளங்கலை ஆங்கிலம் (இடை)

## இளைய உலகம்



உயர்ந்து வா!
உலகம் உனக்காக உருளும் .....
காதல் என்று
கண்டதை நினைத்தால்
காலம் உன்னைக் கைவிடும் ...
கலங்காதே!
கரைசேர்
கடமைகள் பல உண்டு

ந.துர்காதேவி
இளம் வணிகம் (இடை)

நம் கல்லூரிக்கு மேன்மேலும் பெருமை சேர்த்துக்
கொண்டிருக்கும் மாணவ அமைப்புகளின்
இவ்வாண்டிற்கான புதிய தலைமைகளுக்கு
எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| Quiz club | : | **N. Krishna** III B.Sc. Phy. |
| Rotract club | : | **V.Santhosh** III B.Sc. Che. |
| Leo club | : | **A.YesuArokyaBritto** III B.Sc. Zoo. |
| JJC club | : | **D.Balaji** III B.Com. |


ஸ்ரீம்

# SHREEM CARS

*"OTHER NAME IN LUXURY TRAVEL"*

43/I, Mahadhana street,
Mayiladuthurai.



Phone: 41127

EXECUTIVE
TATA SUMO A/C
AVAILABLE.






# மௌனம்



என் இதயம் திருடியவள்
நீ என்று தெரிந்தும்
திருப்பிக் கேட்க மனமில்லை ...

எந்தன் உயிர் பிரியும் முன்
உந்தன் உதடுகளைப் பிரித்து விடு ...

காதலிக்கிறேன் என்று சொல்லி
என்னைக் கலைஞனாக்கு –
இல்லையெனச் சொல்லி
என்னைக் கவிஞனாக்கு –
ஒன்றும் சொல்லாமல்
என்னைப் பித்தனாக்காதே..!

க.சசிகுமார்
முதுநிலை வணிகவியல் (இடை)

# அலைகள் ஓய்வதில்லை

அலைகள் ஓய்வதில்லை
அமைதியாய் இருந்த என் இதயக் கடலில்
விழிகள். எறிந்தவள் நீ!
அன்று தொடங்கிய அலைகள்
இன்று வரை ஓயவில்லை.

ப. விஜயகாந்த்
இளம் வணிகம் (நிறை)

# காஷ்மீர்

இந்தியத் தாயே!
தலைமகனை நீ இழக்க
இளைய மகன்களாம் நாங்கள்
விட மாட்டோம்! என்றும்
விட மாட்டோம்

க.விவேகானந்தன்
முதுநிலை வணிகம் (நிறை)

அறிவிப்புகள் முடிந்து உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டோம். வரிசையில் செல்லும் போதே வரும் வழியில் ஆரோவில் பற்றிய செய்திகளை நமக்கு நாமே அசைபோட்டபடி நடந்தோம். இது 28.2.68 அன்று தொடங்கப்பட்டது. இதன் ஒரே நோக்கம் "மனிதகுல ஒருமைப்பாடு". இதற்காக அங்கே தாமரை மொட்டு வடிவில் ஒரு அமைப்பு கட்டப்பட்டுள்ளது. இதில் 124 நாடுகள் மற்றும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் மண் கொண்டுவரப்பட்டு உள்ளே வைக்கப்பட்டுள்ளது. நம் சிந்தனையைச் சட்டென்று சிதறடித்து, தன்மேல் எல்லாரின் கவனத்தையும் ஈர்த்தது அந்தச் "சிறிய உலகம்".

ஆம்! அது ஒரு சிறு உலகம்தான். உலக உருண்டையைச் சிறியதாக்கி இங்கே வைத்துவிட்டனரோ என்றெண்ணியபடியே நெருங்கினோம். அதுதான் "மாத்திருமந்தீர்" எனப்படுவது. பிரம்மிப்பில் நம் கண்கள் விரிந்ததில்இமைகள் வலித்தன. அதை அப்படியே கண்களில் விழுங்கிக் கொண்டுஉள்ளே நுழைந்தோம். உள்ளே படிகள் சுழன்று, சுழன்று மேலே சென்று கொண்டிருந்தது. அமைதியாய் மேலேறினோம். மேலே நமக்குமுன் சென்றவர்கள் கீழிறங்கினார்கள். அவர்கள் முகத்தில் ஏதோ ஒரு பிரமிப்பும், ஆச்சர்யமும் கலந்த ஒரு மலர்ச்சி தெரிந்தது. நம் முறையும் வந்தது. நாம் அங்கே பார்த்தது ஓர் அறை முழுவதும் வெண்மையாய், நடுவில் ஒரு மெல்லிய கண்ணாடிக் கோளம். மேலேயிருந்து ஒரு சிறிய துவாரம் வழியாய் வரும் சூரிய ஒளி அதிகம்பட்டுச் சிதறி அந்த அறை முழுதும் ஆக்ரமித்து ஒரு பனிப்பிரதேசமாய் ஆக்கியிருந்தது. பின்னால் வருபவர் நம்மை அழைக்கவே நம் கண்களை அறையிலிருந்து பிடுங்க வேண்டியதாயிற்று. திரும்பும் போது முன்பு நாம் அவர்கள் முகத்தில் பார்த்த அத்துணையும் நம் முகத்தில்... மனத்தில் மௌனமாய் ஏதோ முனகல்கேட்டது.

பின் கடற்கரை சென்று சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டோம். அதன்பின் "கைவினைக் காகித தொழிற்சாலை" (Hand made Paper Industry) செல்லத் திட்டமிட்டுக் கிளம்பினோம். அங்கே ஒரு கூட்டம் கண்ணில் பட்டது. அங்கே போனால் கூட்டத்தின் இடையில் யாரோ ஒரு மனிதரைத் தூக்கி நின்று





# உங்களுக்கொரு வாய்ப்பு

இளந்தூதுவில் உறுப்பினராகச் சேர விரும்புவோர் (மாணவ - மாணவிகள்) கீழ்க்காணும் விண்ணப்பதை பூர்த்தி செய்து 10.10.2001க்குள் இளந்தூது ஆசிரியர் குழுவிடமோ (அ) இளந்தூது பெட்டியிலோ சேர்க்கவும்.

**பெயர்** : ____________________

**வகுப்பு** : ____________________

**பிறந்ததேதி** : ____________________

**முகவரி** : ____________________

____________________

____________________

**தொலைபேசி** : ____________________

**தந்தைபெயர்** : ____________________

**தொழில்** : ____________________

**பிற தகுதிகள்** : ____________________

(இருந்தால் அந்த படைப்புகளை இந்த விண்ணப்பத்துடன் எழுதி இணைக்கவும்.)

**பத்திரிகைத் துறையில் முன் அனுபவம் பற்றி** (இருந்தால்)

____________________

**இளந்தூது பற்றித் தங்களின் கருத்துக்கள் :**

____________________

என் மகன்/மகள் கல்லூரியில் படிப்பைத் தொடர்வதுடன் இளந்தூதுவிலும் பணி செய்ய முழு அனுமதி தருகிறேன்

விண்ணப்பதாரர் கையொப்பம் பெற்றோர்/காப்பாளர் கையொப்பம்

குறிப்பு : முதலாமாண்டு மாணவர்களுக்கு மட்டும்

உறுப்பினர் சேர்க்கைக்கான முழு அதிகாரம் ஆசிரியர் குழுவிற்கு மட்டுமே. மாலை நேரக் கல்லூரி மாணவர்களுக்கு (ஆண்) பொருந்தாது.

-ஆசிரியர் குழு

கூட்டத்தை ஒதுக்கிச் சென்று பார்த்ததில் அந்த மனிதரை யாரும் தூக்க வில்லை. அவரேதான் தரையில் நின்று கொண்டிருந்தார். யாரென்று கேட்டதில், அவர் தான் உலகத்தின் உயர்ந்த மனிதர்களில் இரண்டாவது இடமாம். அவர் பெயர் தியாகராஜன். உயரம் 7 அடி 2 அங்குலம். உடனே அவருடன் ஒரு கிளிக். பின் அவரிடம் விடைபெற்று நாம் காகித தொழிற்சாலை சென்றோம். உள்ளே எந்த இயந்திர சத்தமும் இல்லை. உள்ளே. சென்று பார்த்த போது சில மரச்சட்டங்களில் ஏதோ கூழ் போன்ற ஒன்றினை ஊற்றி மேலே, மேலே அடுக்கி அழுத்தி எடுத்துக் கொண்டிருந்தனர். பின் ஒருவரை அணுகி காகித தயாரிப்பு முறையை விளக்கக் கூறினோம். அவர் சொன்னவை, சாக்கு, பனியன் துணி அல்லது கரும்பு சக்கை இவற்றுடன் ஏதேனும் ஒன்றினைக் கூழ் போல் அரைத்துக் கொள்கிறார்கள். பின் அக்கூழானவற்றை வேண்டிய வண்ணங்களில் கலந்து கொண்டு அதற்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ள மரச்சட்டத்தின் மேல் அக்கூழை ஊற்றிச் சமப்படுத்தி அதில் அழுத்தம் கொடுத்து உலர்த்தி விடுகிறார்கள்.

அந்தக் காகிதங்கள் மற்றும் அட்டைகளைப் பலவிதமாக வடிவமைக்கிறார்கள். அடையாளஅட்டை, வாழ்த்து அட்டை, அலுவலக உபயோகத்திற்கான கோப்புகள், அட்டைகள், பேனா, தாங்கிகள் எனப் பட்டியல் நீள்கிறது. இது தவிர புகைப்படக் கோப்பேடுகள் மற்றும் ஓவியம் வரைவதற்கான தனி அட்டைகள் மற்றும்காகிதப் பைகள் என சகலமும் அங்கே. வெளியில் காட்சியகம் வைத்து விற்பனையும் செய்கிறார்கள். நம் இளந்தூவுக்கென சிலவற்றை வாங்கிக் கொண்டு வந்தோம்.

ஆக நம் இளந்தூது பாண்டியைச் சுற்றிப்பார்த்ததில் ஆக்கப் பூர்வமான சில தகவல்களை நம் மாணவர்களுக்காக அறிந்து வந்து பரப்பியிருக்கிறோம்.

தொகுப்பு
- ஆசிரியர் குழு

### [illegible]

மனத்தினைத்
சாந்தப்படுத்த முடியாமல்
வடிகால் தேடும்
எண்ணங்கள்
எழுப்பும் எதிரொலி ...

இரா.சௌமியா
இளம் மின்னனுவியல் (முதல்)





ஏ.வி.சி. கல்வி நிறுவனங்களின் ஆட்சிமன்றக் குழுத்தலைவர்,
"கோல்டன் ஸ்டார்"
## ப.ந.இரத்தினக்குமார்
புத்தாயிரமாண்டின் புகழ்பெற்ற விருது
பெற்றமைக்குப் பாராட்டுகிறோம்.



முல்லைப்பூ தோற்கும் முழுவெண் சோறு
மூக்கைத் துளைக்கும் நால்வகைக் குழம்பு
விருந்தினர் போற்றும்வாழை, வெற்றிலைப் பாக்கு
வாரீர்! உணவுண்டு நூறாண்டு வாழ்வீர்!!

என அன்புடன் அழைக்கும்
பெரி.இராசேந்திரன்

கற்பகம் செட்டிநாடு உணவகம்,
60-61, மகாதானத்தெரு,
மயிலாடுதுறை ☎ : 24654

ஒருங்கிணைப்பாளர் : முனைவர் துரை. குணசேகரன்

# இளந்தூது ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : இர.ரெ.விடுதலை | உறுப்பினர்கள் : |
| இணையாசிரியர்கள் | : சு.நாராயணன்<br>பா.இன்பநிலா | ஜெ.ரகுநாத்<br>ச.பி.செந்தில்நாதன்<br>ச.செந்தில் |
| பொறுப்பாசிரியர்கள் | : ஜெ.வினோத்<br>க.ஸ்ரீவித்யா | தே.சியாமளா<br>லோ.முத்தமிழ்ச்செல்வி |
| துணைபொறுப்பாசிரியர் | : ஹெ.அகஸ்டின்விஜய் | |
| வரை கலைஞர் | : ஜெ.வினோத் | |
| சிறப்பு ஆலோசகர்கள் | : க.அமலன்ராபர்ட்<br>மு.செந்தில்குமார்<br>ஞான.வித்யா<br>கி.கீதா<br>தி.காமாட்சி | |

**இளந்தூது**
அ.வ.அ. கல்லூரி,(தன்னாட்சி)
மாணவர் இதழ்
(தனிச்சுற்றுக்கு மட்டும்)
மன்னம்பந்தல் - 609 305 மயிலாடுதுறை.
ilanthoodhu@rediffmail.com

படைப்புகளைத் திருத்தவோ, சுருக்கவோ ஆசிரியர்குழுவிற்கு உரிமை உண்டு.

உங்கள் படைப்புகள், விமர்சனங்கள் இளந்தூது மின்அஞ்சல் ilanthoodhu@rediffmail.com மூலமும் அனுப்பலாம்.

ஒளியச்சுக்கோவை & அச்சிட்டோர்: **அன்னை பிரிண்டர்ஸ்**, மயிலாடுதுறை. ☎ 41205


**PA▲CT**
**Computer Education**

Peacock Academy For Advanced Computing Technology, Mayiladuthurai

A Training Division of Helios & Matheson IT Ltd., Chennai

*Computer Education With a Difference*

Bring this Coupon — Get Special Offer upto 30%

Name :
Branch:
Year :

Weekend Batches are also available.

Linux - an operating system for next generation

WORLD OF WEB-BASED TECHNOLOGY

CENTERS AT : CHENNAI, KUMBAKONAM, PONDICHERRY, TRICHY, VIJAYAWADA, GUNTUR AND BANGALORE

HAJA COMPLEX, 34 - PATTAMANGALA STREET, MAYILADUTHURAI - 609 001 ✆ 29313

The Unique Shop in Mayiladuthurai

FROM LIFE TO LIFE STYLE

SHALIMAR'S

# SHALIMAR'S

THE REAL GIFT SHOP

41, Avayambalpuram, (opp: Deen Plaza & LIC)

Mayiladuthurai. ☎ : 04364 - 21284

Email: sharlimars@usa.net

*Tomorrow's Fashion Today*

RIGHT PLACE FOR THE BEST PEOPLE

SFHN

*Season Fashionable*

SEASONS FASHIONABLE

# HOMENEEDS

(Opp. Hotel Archana)

29 B, Big Bazaar Street,

Mayiladuthurai. ☎ : 04364 - 22741

Full range of Home appliances, Cosmetics, Gift articles, Greetings, Stationeries, Musicals & leather Bag, Belt etc.